# உலகளாவிய  அரசியல் தொழில் நுட்பம்

- முகுந்த குமார் சேதி ராயர்

விஞ்ஞானத்தில் மலர் தூவிய நேர்பாதை எதுவும் கிடையாது.

களைப்பை கண்டு அஞ்சாது,

அந்த கரடு முரடான கற்பாதைகளில் யாரால் ஊர்ந்து செல்ல முடியுமோ, அவரால் தான்

ஒளிரும் சிகரத்தை அடைய முடியும் - காரல் மார்க்ஸ்

## நமது கனவு

மக்களின் செல்வத்தை கொள்ளையிடாத பொருளாதார அமைப்பும், மக்களின் மனதில், அறிவில், வாழ்வில், ஆதிக்கம் செய்யாத நிறுவனப்படுத்தப்படாத மதமற்ற ஆன்மீகமும், நுண்ணறிவை முடக்காத கல்வியும், சிந்தனை சுதந்திரமும், வாழ்வியல் சுதந்திரமும், சமநீதியும் உடைய ஒரு சமநிலை சமுதாயத்தை, அமைதியான, வளமான, வாழ்க்கையை தரும்.

ஒரு நல்லரசே நமது கனவு . . .

நீ சொல்வதை நான் ஏற்கவில்லை,

ஆனால்,

அதை சொல்கிற உன் உரிமையை காக்க

நான்

என் உயிரையும் தருவேன் - வால்டர்

# அர்ப்பணம்

உலகில் எல்லா உயிர்களும் வாழ உணவும் வசதிகளும் இருந்தும் செயற்கையாக ஏற்படுத்தப்படும் வறுமையிலும், பட்டினியிலும் வாடும் மனித குலத்துக்கு, மனிதர்கள் அனைவரும் உறவினரே என்ற எண்ணமின்றி, சில சுயநலமிக்க இனங்களால் ஏற்படுத்தபட்டிருக்கும் போர்களாலும், வன்முறைகளாலும் ரத்தமும், கண்ணீரும் சிந்தும் உலக சகோதர, சுகோதரிகளுக்கு இந்நூல் அர்ப்பணம்.

எதை இழந்தீர்கள் என்பதல்ல ;

என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.

- ஸ்டீபன் ஹாக்கின்ஸ்

(இயற்பியல் விஞ்ஞானி)

# பொருளடக்கம்

பகுதி - 1 அரசியல் பிரிவுகள்

பகுதி - 2 பொதுவியல்

பகுதி - 3 நல்லரசு

பகுதி - 4 ஆதிக்கஅரசு

பகுதி - 5 இனவாத ஆதிக்க அரசு

பகுதி - 6 தந்திர இனவாத ஆதிக்க அரசு

பகுதி - 7 மூவகை ஆதிக்க அரசுகளின் பொது தொழில் நுட்பங்கள்

# பகுதி - 1

# அரசியல் பிரிவுகள்

| | | |
|---|---|---|
| 1 - 1 அரசு | - | பக்கம் 6 |
| 1 - 2 அரசுகளின் பிரிவுகள் | - | பக்கம் 6 |
| பூர்வகுடிகள் | - | நல்லரசு |
| | - | ஆதிக்க அரசு |
| வந்தேறிகள் | - | நல்லரசு - ஆதிக்க அரசு - இனவாத ஆதிக்க அரசு - தந்திரஇனவாத ஆதிக்க அரசு |
| 1 - 3 அரசுகளின் அபாய வரிசை | - | பக்கம் 8 |
| 1 - 4 தலைவர்களுக்கு | - | பக்கம் 9 |
| 1 - 5 ஆசான் | - | பக்கம் 9 |


## 1-1 <u>அரசு</u>

- மக்களை தன்னுயிராக கருதும் அரசு நல்லரசாகும். தன் சுயநலத்துக்காக பயன்படுத்தும் அரசு
  ஆதிக்க அரசாகும்.

## 1-2 <u>அரசுகளின் பிரிவுகள்</u>

மக்களரசு, பொதுவுடைமை போன்ற சித்தாந்த அரசுகள், மதசார்பு அரசு, முடியரசு போன்ற எல்லாவித அரசுகளையும்.

இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

(1) பூர்வகுடி அரசு

(2) வந்தேறிகளின் அரசு

**1) பூர்வகுடி அரசு**

இது இரண்டு வகையாகும்.

(1) நல்லரசு - பூர்வகுடியினரில் பொதுநலம் மிக்க வல்லவர்களை கொண்டு உருவாகுவது

(2) ஆதிக்க அரசு - பூர்வகுடியினரில் சுயநலம் மிக்கவர்களை கொண்டு உருவாகுவது.

**(2) வந்தேறிகளின் அரசு**

இது நான்கு வகைப்படும்.

(1) நல்லரசு - இது வந்தேறிகளிடம் மிக அரிதாகவே காணப்படும்.

(2) ஆதிக்க அரசு - நாடு யார் ஆட்சில் வேண்டுமானாலும் இருக்கலாம் ஆனால் அந்த நாடு தன் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

**(3) இனவாத ஆதிக்க அரசு**

ஆட்சி, ஆதிகாரம் மற்றும் மேல்மட்ட அதிகார வர்க்கம் முழுவதும் தன் இனத்தால் நிரப்ப வேண்டும். கலப்பினத்தை உருவாக்கி அவர்கள் மூலம் பூர்வகுடிகளை நசுக்க வேண்டும்.

**(4) தந்திர இனவாத ஆதிக்க அரசு**

ஒரு இனம், ஒரு துளி இரத்தம், ஒரு உயிர் கூட இழப்பு ஏற்படாமல், தன் இனத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டி, கலப்பினத்தை உருவாக்கி, படிபடியாக மற்ற இனங்களை அழிக்கும்.

**<u>இறுதி இலக்கு</u>**

வந்தேறிகளின் எந்தவித அரசுகளாக இருந்தாலும் சரி, அது தம்மை இன பெருக்கம் செய்து வளப்படுத்தி கொள்ளும் வரை பூர்வகுடி இனங்களை கட்டுபடுத்தி அவர்களின் உழைப்பையும், அறிவையும், இயற்கை வளங்களையும் பெற்று கொள்ளும்.

பின் இறுதியாக பூர்வகுடிகளை இனபடுகொலை மூலமாகவே, வேறுவித தந்திரங்களை பயன்படுத்தியோ, இன ஒழிப்பு செய்யும்

## 1 - 3 <u>அரசுகளின் அபாய வரிசை</u>

நல்லரசை விட

ஆதிக்க அரசு அபாயமானது

ஆதிக்க அரசை விட

இனவாத ஆதிக்க அரசு அபாயமானது

இனவாத ஆதிக்க அரசை விட

தந்திர இனவாத ஆதிக்க அரசு மிகமிக அபாயமானது, மிக நுணுக்கமானது, உணர்வதும் கடினம்..

ஆனாலும் மூவித ஆதிக்க அரசுகளுக்கும் அடிப்படை ஒன்றே.

மூக்கணாங்கயிற்றை மாற்றி மாற்றி போட்டாவது புதிய புதிய தலைவர்களை உருவாக்கி நாட்டை கட்டுபாட்டிற்குள் வைக்க வேண்டும்.

## 1 - 4 <u>தலைவர்களுக்கு</u>

(1) தலைவர்களின் லாபம் என்ன?

மக்களிடையேயான தொடர்புகளும், அவர்களின் நம்பிக்கையம் பொருள் / மற்ற லாபங்களை உண்டாக்கும்

(2) தலைவராக தகுதி

படிப்பவர்கள் தலைவர் ஆவார்கள்

தலைவர்கள் அதிகம் படிக்க வேண்டும்

சிந்தனை தெளிவு வேண்டும்.

அதன்படி வாழ வேண்டும்.

(3) தலைவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய இடம்

அ) தன் வாழ்க்கை துணையை தேர்ந்தெடுத்தல்

ஆ) தன் சந்ததியினரின் வாழ்க்கை துணையை தேர்ந்தெடுத்தல்

(முடிந்த அளவு தன் இரத்த உறவுக்குள் அல்லது இனகுழுவுக்குள் இருக்க வேண்டும்)

## 1 - 5 <u>ஆசான்</u>

ஒரு இனம் தன் அரசியல் ஆசான், ஆன்மீக ஆசான், வாழ்வியல் நிகழ்வுகளுக்கான ஆசானாக, தன் இனத்தை (தன் இனவரலாறும், சுயபுத்தியும் உள்ள) சேர்ந்தவரையே கொண்டிருக்க வேண்டும்.

மற்ற இனத்தவரை ஆசானாக கொள்ளும் போது, அந்த மக்கள், அந்த ஆசானுடைய இனத்துக்கு அடிமையாக மாறுவர்.

# பகுதி -2

# பொதுவியல்

2 - 1 பொருளியல்

2 - 2 மதம்

2 - 3 மதம் - மக்கள் - பொருள் சில தொடர்புகள்

2 - 4 மதமும் அரசும்

2 - 5 உளவு

2 - 6 ஒரு நாட்டை உடைப்பது எப்படி

2 - 7 எதிர்ப்பு உருவாகாமல் தடுத்தல்

2-7-1 எடுத்து கெடுத்தல்

2-7-2 கொடுத்து கெடுத்தல்

2 - 8 பொது அரசியல் தொழில் நுட்பம்

2-8-1 ஊடுருவி கட்டுபடுத்தல்

2-8-2 உருவாக்கி கட்டுப்படுத்தல்

## 2 - 1 பொருளியல்

- பணம் அல்லது செல்வம் என்பது என்ன?

  சுருக்கப்பட்ட, பரிமாற்றத்தக்க உழைப்பின் வேறு வடிவம்.

- ஏழ்மை/வறுமை என்பது என்ன?

  உழைப்பின் பற்றாகுறை அல்லது உழைப்பை வீணடித்தல், சுரண்டுதலால் ஏற்படுவது.

- முதலாளித்துவம், பொது உடைமை என்ன வேறுபாடு?

  ஒன்றுமேயில்லை,

  ஒரு நாணயத்தின் இருபக்கங்கள்,

  ஊசலின் இரு எல்லைகள்,

  ஒருங்குப்படுத்தப்பட்ட சமூக அமைப்பில் இலாப பங்கு போட்டியின் இரு எல்லைகள்.

  முதலாளிதுவம் ஒரு முகபடுத்தி கொள்கிறது.

  பொது உடைமை பிரிந்து எடுத்து கொள்கிறது அவ்வளவே ஆனால் இரண்டுமே.

  தனி மனித சுதந்திரத்தை முற்றாக பறிக்கிறது.

- நமக்கு தேவை என்ன?

  உயிரின் சுதந்திரத்தையும், படைப்பாக்கத்திறனையும் உறுதி செய்யும் மூன்றாவதாக ஒரு பொருளாதார சித்தாந்தம்

## 2 - 2 மதம்

- எல்லா மதமும் அரசியல் நோக்கி செல்லும்

  எல்லா அரசியலும் பணத்தை நோக்கி செல்லும்

  ஆன்மிகம் என்பது அறிவியல் - மனிதனின் உளவியல் தேவைக்காக உருவாக்கபடுகிறது. மதம் என்பது அரசியல் - அரசின் தேவைக்காக உருவாக்கப்படுவது.

- பெருவாரியான மக்கள் புரிந்து கொள்ள விரும்பாத நுணுக்கமான இயற்கை விதிகள் அண்டத்தில் நிறைய உண்டு. அவற்றை புரிந்து கொள்ளுதல் ஆன்மீகம்.

  அதை புரிந்து கொண்டவர்களும், புரிந்ததாக நடிப்பவர்களும், அரசுகளும், தமது சுயநலத்துக்காக மக்களை ஆட்டுவிக்க உருவாக்கிய கருவியே மதம்.

## 2 - 3 மதம் - மக்கள் - பொருள் - சில தொடர்புகள்

- மதத்தின் மூலம் ஒருவரின் மூளையை, மனதை அடிமையாக்கி ஆட்டுவிப்பதன் மூலம் அவரின், திறமை, அறிவு, செல்வம், செல்வாக்கு, உழைப்பு, வாழும் காலம் என அனைத்தையும் இலவசமாக பயன்படுத்தி கொள்ளலாம்..

- மதமும், பணமும் வலுவான உந்து சக்திகள்

  ஆனால் மதம் சிறப்புமிக்கது

  அறிவை மனதை அடிமைபடுத்துவதன் மூலம் மதத்திற்கு பல லாபமுண்டு.

  ஊதியம் இல்லா வேலைக்கார அடிமைகள் நிறைய கிடைப்பார்கள்.

  அந்த மதம் உருவாக்கும் பண்பாட்டு, கலாசார நுகர்வோர் நிறைய கிடைப்பார்கள்.

  இதனால் அந்த மத நிறுவனத்தை உருவாக்கிய இனகுழுவுக்கு அரசியல் லாபம், வியபார லாபம் மட்டுமின்றி

வேலைக்கார எறும்புகள் போன்ற ஒரு அடிமை கூட்டமும் இலவசமாக கிடைக்கும்.

## 2 - 4 மதமும் அரசும்

- அரசு, மதத்தை ஒரு சிறப்பான ஆயுதமாக பயன்படுத்தலாம்.
- அரசு, தன்னுடைய குடிகளின் நல்வாழ்வு நலிவடையும்போது மத பிரசாரத்தை அதிகரிக்க வேண்டும்.
- அரசு வேற்று நாடுகளின் மீது தன்னுடைய மதத்தை பரப்புவதை மூலம் மறைமுகமாக அந்த நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தலாம்.
- எந்த நாடு மதத்தின் தயவால், மத தலைவர்களின் சொல்படி, ஆட்சி செய்கிறதோ? எந்த நாட்டில் மதத்தின் செல்வாக்கும், செல்வ வளமும் அதிகரித்து கொண்டே செல்கிறதோ?

    அந்த நாட்டின் அரசு அழிந்து வருகிறது என்று பொருள்
- மதத்தின் செல்வாக்கு அதிகரிக்கும் நாட்டில், நிம்மதியின்மையும், ஏழ்மையும், முட்டாள்தனமும் அதிகரிக்கும்.
- சுய கட்டுபாடற்ற, சமூக ஒழுங்கற்ற மக்களை கட்டுபடுத்த மதத்தை பயன்படுத்தலாம்.
- மத ரீதியாக அடிமை கொள்ளப்படும் மக்களால் வாழ்வியல், பொருளியல், அரசியல் மாற்றங்களை உண்டு செய்ய இயலாது.
- அரசுக்கு உதவியாக செயல்பட வேண்டிய மதம்

    அரசுக்கு எதிராக செயல்படும்போது, மதவெறி தூண்டப்படும் போது என்ன செய்ய வேண்டும்?

    யானைக்கு மதம் பிடித்தால், என்ன செய்ய வேண்டுமோ அதை செய்ய வேண்டும்.
- துறவிகள், குருமார்கள், மதவாதிகள், மதநிறுவனங்கள் ஆகியவற்றை அரசு தொடர்ந்து கண்காணித்து அவற்றின் பயன்பாடு அறியாத சொத்து குவிப்புகளை உலகின் / நாட்டின் தேவைகளை நிறைவு செய்ய பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

மேற்கண்ட நான்கு இனத்தையும் அரசு அங்கீகரித்து சிறப்பிக்க வேண்டும்.

## 2 - 5 உளவு

- ஒரு நாட்டின் உயிர், ஒற்றர் படையில் உள்ளது.
- உளவு அமைப்பில் அந்த நாட்டின் எல்லா பூர்வ குடிகளுக்கும் பங்கு இருக்க வேண்டும்.
- உளவு அமைப்பின் மைய நிர்வாகம் பூர்வகுடி அல்லாத இன குளுவினரால் நிரப்படும் போது,

அந்த நாடு முழுமையும், அந்த இனத்தினரின் சுயநலத்துக்காக பயன்படுத்தப்படும். பூர்வகுடிகள் சிறிது சிறிதாக நசுக்கப்படுவார்கள் பின் அழிக்கப்படுபவர்கள்.

- உளவு அமைப்பின் மைய நிர்வாகம், எந்த இனத்தவரிடம் இருக்கிறது என்பதை கொண்டு, அந்த நாடு எந்த இனத்தவரின் கட்டுபாட்டில் இருக்கிறது என கண்டு கொள்ளலாம்.
- வெவ்வேறு மைய கருத்துகளின் அடிப்படையில் ஒரு நாடு குறைந்தது நான்கு உளவு அமைப்பாவது கொண்டிருக்க வேண்டும்.
- சுதந்திரமான (கட்டுபாடற்ற) உளவு படை, அந்த அரசுக்கும், அரசின் தலைமைகளுக்கும் ஆபத்தை விளைவிக்கும்.

## 2 - 6 <u>ஒரு நாட்டை உடைப்பது எப்படி?</u>

ஒரு நாட்டில் ஒரே மொழி இருந்தால் இரண்டாக மாற்ற வேண்டும். இரண்டு மொழி என்றால் இரண்டு நாடு தான் தவிர்க்க முடியாது.

மதத்தால் உடைக்க வேண்டும் இரண்டு மதம் என்றால் இரண்டு நாடுதான்.

## 2 - 7 எதிர்ப்பு உருவாகாமல் தடுத்தல்

எதிர்ப்புகள் உருவாக்ககூடும் என கருதப்படும் இடங்களில், எதிர்ப்பு உருவாகாமல் தடுப்பதற்கு     கெடுப்பதற்கு இரு வழி முறை உண்டு.

எதிர்ப்புகள் உருவாகக்கூடும் என கருதப்படும் இடங்களில், எதிர்ப்பு உருவாகாமல் தடுப்பதற்கு / கொடுப்பதற்கு இரு வழி முறை உண்டு.

1) எடுத்து கெடுத்தல்

2) கொடுத்து கெடுத்தல்

## 2-7-1 எடுத்து கெடுத்தல்

பொருள் வளத்தை அழித்தல், வரும் வழியை அடைத்தல் அதன் மூலம் பொருளாதாரத்தை நசுக்குதல். (இதன் அடிப்படை பொருளாதாரத்தை நசுக்குதல்)

**விளைவு**

பொருள் வளம் குன்றுவதால் பெருமளவு எதிர்ப்புகள அடங்கி ஒடுங்கி விடும். ஆனால் வெகு சிலர் பெரும் வெறியுடன், உறுதியுடன் எழுவார்கள். அவர்களால் ஒட்டு மொத்த அமைப்பும் அழித்து ஒழிக்கப்படும்.

## 2-7-2 கொடுத்து கெடுத்தல்

பொருளாதார உதவி செய்து, பொருள் வளம் பெருக செய்தல், அப்போது மது, சூது, பாலியல் விழைச்சு போன்றவற்றை பழக்கப்படுத்தல் (இதன் அடிப்படை பொருளாதாரத்தை உயர்த்துதல்)

விளைவு

பொருள் வளம் பெருகி, அதே சமயத்தில் அவர்கள் சுகபோகத்தில் செலுத்தப்படுவதால், அவர்கள் உடல் மன ஆற்றல்கள் வடிந்துவிடும். எதிர்ப்புணர்ச்சி இருந்தாலும் சுகம் பாதிக்கும் என்பதால் வேகம் இருக்காது.

சுகங்களில் இருந்து ஒரு காலகட்டத்தில் வெளியே வந்தாலும் 1) அவர்களின் காலம் கடந்துவிடும், 2) அவர்களால் பழைய அளவு உடல், மன, சூழ்நிலை வன்மையை வேகத்தை மீட்டெடுக்க முடியாது.

## 2-8 பொது அரசியல் தொழில் நுட்பம்

அனைத்து வித அரசுகளுக்கும் எதிர்ப்பு இருக்கவே செய்யும்.

அரசு எதிர்ப்பு பலவித கருத்துகளின் அடிப்படையில் பல குழுக்களாக இருக்கும்.

### 2-8-1 ஊடுருவி கட்டுபடுத்தல

ஏற்கனவே உருவாகியுள்ள அரசியல் எதிர்புணர்வு குழுக்களை ஊடுருவி கட்டுபடுத்த வேண்டும்.

பல்வேறு கருத்தியல் குழுக்கள், பலவித அரசியல் குழுக்கள், அமைப்புகள், கலக கூட்டங்கள் அனைத்திலும் தன்னுடைய இனத்தை சேர்ந்தவரை குறைந்தது ஒருவரையாவது இணைந்து கொள்ள செய்ய வேண்டும்.

அவர்களை அந்த அமைப்பு சார்ந்த கொள்கை, கோட்பாடுகளில் ஆழ்ந்த அறிவும், தீவிர ஈடுபாடும் கொண்டவர்களாக காட்டி கொள்ள செய்ய வேண்டும்.

அதன் மூலம் அந்த அமைப்பின் மீது ஆளுகையும் அதன் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மீது ஆளுகையும், நெருக்கமும் உண்டாகும்.

பின்பு தலைவர்கள், நிர்வாகிகளின் தனிபட்ட பலம், பலவீனங்கள், தேவைகளை கண்டறிந்து, பலவீனங்கள் மூலம் ஊடுருவியோ, தேவைகளை நிறைவு செய்யும் வழியாகவோ அவர்களை முழுகட்டுபாட்டில் கொண்டுவர வேண்டும்.

**பயன்கள்**

1) எதிர்ப்பு குழுக்கள், மாறுபட்ட கருத்துள்ள குழுக்கள் போன்றவை வளராமல் அவற்றை கட்டுக்குள் வைக்க முடியும்.
2) அதன் தலைவர்களை கட்டுபடுத்தி, அரசு, தமக்கு தேவையான முறையில் அவர்களை இயக்க முடியும்.
3) கருத்தியல் ரீதியாக நீர்த்து போக செய்ய முடியும்.

4) அவர்களின் தொடர்புகள், புதிய உறுப்பினர்கள் பற்றிய தகவல்களை திரட்ட முடியும்.

5) அமைப்பின் முக்கியமான நடவடிக்கைகளை முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியும்.

6) அமைப்பின் முக்கியமான செயல்பாடுகளின் போது, அதை திசை திரும்ப முடியும், தவறான முடிவு எடுக்க வைக்க முடியும்.

7) ஆதிக்கம் செய்யும் இனம் தன்னுடைய இன எதிரிகளுக்கு எதிரான ஆயுதமாக அநத அமைப்பை பயன்படுத்த முடியும்.

8) அமைப்பின் உள்ள உள் எதிரிகளை கண்டறிந்து பயன்படுத்தி கொள்ள முடியும்.

## 2-8-2 உருவாக்கி கட்டுபடுத்தல்

### ஆலோசித்தல்

அறிஞர் குழுக்கள் மற்றும் பல்வேறு குழுதலைவர்களை கூட்டி, பல்வேறு தலைப்புகளில் அவர்களின் கருத்துகளை சேகரித்து ஆராய்ந்து பின் முறைபடுத்தி பிரிக்க வேண்டும்.

### உருவாக்குதல்

முடிவு கருத்துகளின் அடிப்படையில் அரசு, பல்வேறு கருத்தியல் குழுக்களை, அரசியல் குழுக்களை, எதிர்ப்பு குழுக்களை உருவாக்க வேண்டும்.

### பயன்

1) இதன் மூலம் பல்வேறு உண்மையான அரசியல் எதிர்ப்பு இயக்கங்கள் உருவாகாமல் தடுக்க முடியும்.

2) எதிர்ப்பு கருத்துகள், எதிர்ப்புணர்வு உள்ள மக்களை கண்டறிய முடியும்.

3) எதிர்ப்புணர்வை நீர்த்து போக செய்ய முடியும்.

4) அவர்களை திசைதிரும்ப முடியும்.

5) அவர்களை கட்டுபடுத்த அல்லது ஒழித்து கட்ட முடியும்.

# பகுதி -3

# நல்லரசு

3 - 1 நல்லரசு

3 - 2 நல்லரசும் குடிகளும்

3 - 3 நல்லரசு நிர்வாகத்தில் அடிப்படை கோட்பாடுகள்

## 3 - 1 நல்லரசு

- அரசின் செயல்களில் ஒவ்வொரு குடிமகனுக்கும் நேரடி பங்கு இருக்க வேண்டும்.

- அரசுக்கு விடுமுறை என எதுவும் கிடையாது.

- அரசு நிர்வாகம் சிறப்பாக இருப்பதை எப்படி அறிவது? அங்கு அரசு இருப்பதே தெரியக்கூடாது.

- அதிகாரங்களை ஓரிடத்தில் குவிக்கக் கூடாது. அவ்வாறு மையப்படுத்துவது குழு மேலாண்மையை தோற்றுவிக்கும்.

- ஒரு அரசு நீண்டகாலம் இருக்க வேண்டும் எனில்,
  தேர்ந்த தன்னலமற்ற அறிவாளிகளின் நிர்வாகத்தையும்,
  சுய கட்டுப்பாடுடைய மக்களையும் கொண்டிருக்க வேண்டும்.

- அரசு ஒரு பிரச்சனையை கையாளும் போது மூன்றாக பிரித்து கையாள வேண்டும்.
  அது கடந்த காலத்தில் எதனால் உருவானது.
  உடனடியாக என்ன தீர்வு செய்ய வேண்டும்.
  எதிர்காலத்தில் மீண்டும் ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்.

- முழுமையும் தன்குடிகளால் விரும்பப்படுகிற, அன்பு பெற்ற, ஒத்துழைப்பு பெற்ற தலைவர் ஆசீர்வதிக்கப்பட்டவன்.

- தன் உயிராக குடிகளை எண்ணும் தலைவனையும், குடிகளை அன்புடன் பேணுகின்ற அரசு ஊழியரையும் கொண்ட குடிகள் பேறு பெற்றவர்கள்.

- தலைவர்களும், அரசு ஊழியர்களும், மக்கள் மத்தியில் இருந்து எழுகிறார்கள். அவர்கள் சரியில்லை என்றால் மக்கள் சரியில்லை என்று பொருள் நல்லரசு நல்ல மக்களிடமிருந்து எழுகிறது.

## 3 - 2 நல்லரசும் - குடிகளும்

- அரசின் அடிப்படை நிர்வாகம் / அலகு வேர் குடிகளே.

- குடிகள் - குடும்பங்களை - அவற்றின் குலப்பெருமைகளை காட்டி பெருமைப்படுத்தி ஒன்றிணைத்து இயங்கும் அரசு வலிமை பெறும். குடும்பங்களை சிதறடிக்கும், மனவேதனைப்படும் பிரச்சனைகளை ஏற்படுத்தும் அரசியல் அமைப்பு வலிமை குன்றும்.

- கலாசார, பண்பாட்டு தாக்குதல்,

  பொருளதார தாக்குதல்,

  தன்னம்பிக்கையை, தான் என்ற எண்ணத்தை,

  குடிகளின் கம்பீரமான, சுதந்திரமான, அமைதியான வாழ்வை எவ்விதத்திலாவது குலைக்கும், எந்த செயல்களில் இருந்தும் அரசு தம் மக்களை, குடிகளை காக்க வேண்டும், அக்கடமையில் தவறும் அரசு விரைவில் வீழ்ந்துவிடும். (எதிர் அரசுகளை அழிக்க இதுவும் ஓர் ஆயுதம்)

## 3 - 3 நல்லரசு நிர்வாகம் நிர்வாகம் சில அடிப்படைகள்

1) அதிகார அமைப்பு சமநிலைபடுத்தப்பட்டதாய் இருக்கும்.. இருக்க வேண்டும்.

2) அதிகாரம் பரவலாக இருக்க வேண்டும்.

3) ஒவ்வொரு சிறிய நிலவியல் குடியிருப்பு (கிராமம்) பகுதியும் தன்னாட்சி பெற்று அதிகபட்ச சுதந்திரம் பெற்று இருக்க வேண்டும்.

4) அரசு வருவாயின் ஒவ்வொரு துளியும், மக்களின் கல்வி பெருக்கம், செல்வபெருக்கம், உடல்நலம், பாதுகாப்பு, அடிப்படை வசதிகள் மற்றும் தொலைநோக்கு திட்டங்களுக்கு செலவு செய்ய வேண்டும்.

5) நீதி நிர்வாகம், மனித தன்மையுடனும், கருணையுடனும், தண்டனைகள் அவர்களை திருத்தும் முறையிலும் இருக்க வேண்டும்.

6) மக்களும், அரசு ஊழியர்களும் சுய கட்டுபாடு உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

7) அரசு ஊழியர்களுக்கும், மக்களுக்கும் இடையில் பொருளாதாரம் சமநிலையில் இருக்க வேண்டும்.

8) மக்களின் சராசரி வருவாய் அதிகரிக்கும் போது அரசு ஊழியரின் சம்பளம் அதிகரிக்க வேண்டும். மக்களின் சராசரி வருவாய் குறையும் போது அரசு ஊழியரின் சம்பளம் குறைய வேண்டும்.

9) அரசு ஊழியர்கள் மக்களுக்கிடையில் (மக்களுடன் கலந்து) வாழ வேண்டும்.

10) மக்களுக்கு சேவை செய்வதே அரசின் குறிக்கோள்.

11) சமூக காவலர், தேச எல்லை காவலர் போன்றவர்கள் சமூகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் காவலர்களே.

12) அதிகார அமைப்பும், காவலர் அமைப்பும் மக்கள் அச்சமின்றி நட்புறவுடன் அணுகும் அளவு நல்லெண்ணத்தை மக்களிடம் பெற்றிருக்க வேண்டும். அதுவே நல்லரசின் அடையாளம்.

13) கையூட்டு அரசியலில் தவிர்க்க முடியாதது. அது நல்லரசில் அரசிற்கும், மக்களுக்கும், நாட்டிற்கும் துரோகம் செய்யவும், கடமை மீறவும் கொடுக்கப்படும்.

14) சமூக காவலர், நீதி நிர்வாகம், ஆட்சி போன்றவை ஒவ்வொரு நிலவியல் குடியிருப்பு பிரிவுக்கும் (கிராமத்துக்கும்) அப்பகுதி மக்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மக்களுக்கு பணி செய்ய அங்கேயே நியமிப்பதுடன் முழுமையான தன்னாட்சி கொடுக்க வேண்டும்.

# பகுதி -4

# ஆதிக்க அரசு

4 - 1 ஆதிக்க அரசியல்

4 - 2 ஆ.அ. - அடிப்படை கோட்பாடுகள்

4 - 3 ஆ.அ. - என்ன செய்ய வேண்டும்

4 - 4 ஆ.அ. - மக்களை பிரித்தாளுதல்

4 - 5 மக்களை முட்டாளாக்குதல்

4 - 6 அதிகாரம் செலுத்த வைத்தல்

4 - 7 உள்நாட்டு அகதிகளாக்குதல்

4 - 8 ஆ.அ. - நிர்வாகம்

4 - 9 ஆ.அ. - மக்கள் நிர்வாகம்

4 - 10 அதிகாரிகள் நிர்வாகம்

4 - 11 படிநிலை அதிகார வார்க்கத்தை தேர்ந்தெடுப்பது எப்படி?

4 - 12 அதிகாரிகள் எப்படி நடக்க வேண்டும்

## 4 - 1 ஆதிக்க அரசு

நாட்டை எந்த தலைவர் வேண்டுமானலும் ஆட்சி செய்யலாம். நாடு தனது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

## 4 - 2 ஆதிக்க அரசு நிர்வாகம்

1) அதிகார அமைப்பு படிநிலை அமைப்புடையதாய் இருக்க வேண்டும்

2) அதிகாரம் ஒரே இடத்தில் குவிக்கப்பட வேண்டும்.

3) ஒவ்வொரு நிலவியல் குடியிருப்பு பகுதியும் தன்னாட்சி பெற்றதை போன்ற பாசாங்குடனும் பெயரளவு அதிகாரத்துடன் இருக்க வேண்டும்.

4) சமூக காவல், நீதி நிர்வாகம் போன்றவை எல்லா குடியிருப்பு பகுதிகட்கும், வெவ்வேறு பகுதியிலிருந்தும், வெவ்வேறு இனத்திலிருந்தும் நியமிக்க வேண்டும். பெயரளவு சுதந்திரத்துடன் ஆதிக்க அரசு இலக்கணம் அத்தனைக்கும் எடுத்துகாட்டாய் திகழ வேண்டும்.

5) அரசை ஒரு லாப நோக்கு நிறுவனமாக கருதி, அரசு செய்ய வேண்டும் ஆதிக்க அரசு லாபமடையும் வகையிலும், வருவாயை வந்தேறி இனம் வளமாகவும், பாதுகாப்பாகவும் வாழ பயன்படுத்த வேண்டும். பெயரளவு மக்கள் நலதிட்டத்துக்கு செலவு செய்ய வேண்டும். மக்களின் எதிர்ப்பு அதிகரித்தால் சிறிது அதிகமாக செலவு செய்ய வேண்டும்.

6) நீதி நிர்வாகம் அடிதளத்தில் நேர்மையுடன் நடப்பதாக காட்டி கொள்ள வேண்டும். மேல் மட்டத்தில் அரசுக்கும், ஆதிக்க இனத்துக்கும் சார்பாகவும், ஒருதலை பட்சமாகவும் இருக்க வேண்டும்.

7) அரசு ஊழியருக்கு அதிக அதிகாரம் கொடுத்து நிர்வாகத்தில் கட்டுபாடற்ற தன்மையை ஏற்படுத்த வேண்டும்.

8) அரசு ஊழியருக்கும் மக்களுக்கும் இடையில் பொருளாதார ஏற்றதாழ்வு இருக்க வேண்டும். மக்களின் சராசரி வருவாயைவிட அரசு ஊழியரின் 1) வருவாய் அதிகமானால் அவர்கள் மக்களை அதிகாரத்துடன் நடத்தி பலவழியில் நசுக்கி பொருள் பெறுவார்கள். (2) வருவாய் குறைந்தால் மக்கள் மீது வெறுப்பு கொண்டு மக்களை நசுக்கி ஏறத்தாழ கொள்ளைக்கு சமமாக பொருளை பிடுங்கி கொள்வார்கள்.

9) அரசு ஊழியர், சமூக காவலர் போன்றோரை தனி குடியிருப்புகளில் மக்களைவிட அதிக வசதியுடன் குடியிருக்க செய்ய வேண்டும்.

10) மக்களை கட்டுபடுத்தி உழைப்பு, இயற்கை வளம் ஆகியவற்றை எடுத்து கொள்வதே அரசின் குறிகோள்.

11) சமூக காவலர், தேச எல்லை காவலர் போன்றோர் சமூகத்திலிருந்து தேர்ந்தேடுக்கப்பட்டு அவர்கள் பூர்வ குடிகளாயின் நீங்கள் மக்கள் காவலர் என மூளையில் ஏற்ற வேண்டும். வந்தேறி ஆதிக்க இனமாயின் நீங்கள் மக்களை கட்டுபடுத்துங்கள் இது நமது அரசு என மூளையில் ஏற்ற வேண்டும் ஆக அடிப்படையில் சமூக மற்றும் தேச எல்லை காவலர் இருவரும் அரசின் காவலரே அன்றி மக்கள் காவலர் அல்லர்.

12) அதிகார அமைப்பும், காவலர் அமைப்பும் மக்கள் நெருங்க அஞ்சும் விதத்தில் இருக்க வேண்டும்.

13) கையூட்டு ஆதிக்க அரசில் எல்லா விதத்திலும் பயன்படும். தேச துரோகத்துக்கு மட்டுமல்ல, கடமையை மீறுவதற்கு மட்டுமல்ல, கடமையை செய்வதற்கே கையூட்டு கொடுக்க வேண்டும். இது ஆதிக்க அரசின் வெளிப்படையான அடையாளம்.

## 4 - 3 ஆதிக்க அரசு என்ன செய்ய வேண்டும்

(2) மக்களை பிரித்து ஆள வேண்டும்.

(3) மக்களை முட்டாளாகவும், அடிமையாகவும் ஆக்க வேண்டும்.

(4) நிர்வாகம் சுயநலமிகளால் நிரப்பப்பட வேண்டும்.

## 4 - 4 மக்களை பிரித்தாள்வது எப்படி?

- இனகுழுவை சிதறடிக்கும் உத்திகளை பயன்படுத்த வேண்டும்.
- மக்களை இரண்டாக, எட்டாக, பலவாக பிரித்து அவர்களுக்கு நல்லது செய்வது போல காட்டி கொண்டு பொய்யான கட்டுக்கதைகள், புனைந்துரைகள், வதந்திகள் மூலம் அவர்களுக்குள் காலம் காலாமாக பகை இருந்ததாக செய்திகளை பரப்ப வேண்டும்.
- சிறு பிரச்சனைகளை உருவாக்க வேண்டும். அதை பெரிதாக்கி பெரும் சண்டைகளை உண்டாக்க வேண்டும்.
- சண்டையின் போது, வதந்திகள் மூலம் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்ற செயல்களில் ஈடுபட செய்வதன் மூலம் அவர்களுக்குள் பரம்பரை பகையை உண்டாக்க வேண்டும்.
- சட்டம் மதம், பழக்க வழக்கம், பொருளாதாரம், மனித உறவுகள், (ஆண், பெண) பாலியல் உறவுகள் ஆகிய எந்த காரணத்தையாவது பயன்படுத்தி மக்களுக்குள் பகையை உருவாக்கி கொண்டே இருக்க வேண்டும்.
- இனத்துக்கு இனம் பகை மூட்ட வேண்டும், ஊர்களுக்கு இடையில் பகை மூட்ட வேண்டும். தெருக்களுக்கு இடையில் பகை மூட்ட வேண்டும். குடும்பங்களுக்கு இடையில் பகை மூட்ட வேண்டும். குடும்பத்துக்கு உள்ளேயும் உறவுகளுக்குள் பகை மூட்ட வேண்டும். இது தான் ஆதிக்க அரசியலின் அடிநாதம் ஆகும்.
-

## 4 - 5 மக்களை முட்டாளாக்குதல்

போதை, கலாசார சீரழிவு, கல்வி அறிவின்மை, ஏழ்மை, மதம், நோய்கள், ஒழுக்க கேடு ஆகியவை பெருக மறைமுகமாக ஆதரிக்க வேண்டும். நேரடியாக எதிர்பது போலவும், கட்டுபடுத்த முடியாதது போலவும் காட்டி கொள்ள வேண்டும்.

மக்கள் இவற்றிலிருந்து விடுபட கூடாது.

விடுபட்டால், சிந்திப்பார்கள், கேள்வி கேட்பார்கள், போராடுவார்கள்.

அதனால் மக்களை இது போன்ற செயல்களில் ஈடுபாடு கொள்ள செய்ய வேண்டும்.

அவர்களுக்கு பிரச்சனைகள் இருந்து கொண்டே இருக்க வேண்டும். நிம்மதியாக வாழவிடக்கூடாது.

ஆகவே ஆதிக்க அரசு நிலைபெற, நிலைத்திருக்க மேற்கண்ட செயல்கள் மக்களிடம் பரவ, அரசு மறைமுகமாக செயல்பட வேண்டும் ஆதரித்து பரப்ப வேண்டும்.

## 4-6 அதிகாரம் செலுத்த வைத்தல்

ஒரு ஆதிக்க அரசு, அம்மக்களுக்கு அரசியல் சுதந்திரம் இருப்பது போன்ற தோற்றத்தை உண்டு செய்ய வேண்டும்.

அறிவியல் மூலமாக, செய்தி பரப்புதல் (ஊடகங்கள்) வாயிலாக அம்மக்களுக்கு புதிய புதிய வாழ்வியல் சிக்கல்களை உருவாக்கி கொண்டிருக்க வேண்டும்.

சுயநலமிகளை கொண்டும், சித்தாந்தங்களை கொண்டும் மற்றும் மற்றைய பிரிந்தாளும் செயல்முறைகளை கொண்டும் பிரித்தாள வேண்டும்.

நிர்வாகத்தில் மாற்று இனத்தவரை ஊடுருவ வைத்து அதிகாரம் செலுத்த செய்ய வேண்டும்.

அவ்வப் பகுதில் சொந்த இன அரசை உருவாக்க வேண்டும். ஆனால் சட்டபடி இறுதி அதிகாரம் வேற்று இனத்தவரின் மேலாண்மையில் இருக்குமாறு செய்ய வேண்டும். அவரும் ஆதிக்க அரசின் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுப்பவராக இருக்க வேண்டும்.

காவலர், கலவரதடுப்பு, பாதுகாப்பு இராணுவம் போன்ற பலதரப்பட்ட மக்கள் காப்பு படையினர் உள்நாட்டில் பணி செய்யும் போது மிக கவனமாக மாற்று மதத்தினரை, இனத்தினரை கொண்ட படையணியை அனுப்ப வேண்டும்.

## 4-7 உள்நாட்டு அகதிகளாக்குதல்

ஆதிக்க அரசு மண்ணிடமிருந்து மக்களை பிரிக்க வேண்டும். அந்த பந்தத்தை வேரோடு வெட்டி எடுக்க வேண்டும். இராணுவம், பெரும் பொது நலதிட்டங்கள், பொருளாதார, வாழ்வியல் மேம்பாட்டுக்காக என்ற முகமூடியுடன் நிலங்களை பறித்து கொண்டு மக்களை வெளியேற்ற வேண்டும்.

கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றை நகரங்களில் மைப்படுத்துவதன் வாயிலாக அவர்களே விருப்பத்துடன் இடம் பெயர செய்தல்.

புதிய புதிய பொருளாதார சித்தாந்தங்களை உருவாக்குதல் தனியார் நிறுவனங்களை துணை செய்ய செய்தல் மூலமாகவும் வெளியேற்றுதல்.

மாற்று இன தீவிரவாதத்தின் மூலமாகவும், இனபடுகொலை, இயற்கை பேரிடர்கள் மூலமாகவும் வாழ்க்கைக்கு பாதுகாப்பற்ற பகுதியாக அந்நில பகுதியை மாற்றி, மக்கள் தாமே விரும்பி பாதுகாப்புக்காக இடம் பெயர செய்தல்.

## 4-8 <u>ஆதிக்க அரசு நிர்வாகம்</u>

எதிரி அரசின் துரோகி, நமது சிறந்த பணியாள் என்பது எப்படி உளவு அமைப்புகளின் - முதல் விதியோ அப்படியே

ஒரு இன துரோகி ஆதிக்க அரசின் சிறந்த பணியாள்.

## 4-9 <u>மக்கள் நிர்வாகம்</u>

அந்நாட்டு மக்களை குறைந்தபட்சம் இரு பிரிவுகளாக பிரிக்க வேண்டும் உண்மையான ஆதிக்கம் செலுத்தும் இனத்தார் அவர்களுக்கு இடையே இருக்க வேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

வன்முறை, சித்தாந்தம், மதம், பொருளாதாரம் என ஏதோ ஒரு காரணத்தை முன்வைத்து, ஒரு பிரிவுக்கு பெயரளவு அதிகாரத்தை அதிகபடுத்தி அவர்களை ஆதிக்க இனமாக மற்றவர்க் காட்டி அவர்களை கொண்டு மற்ற பிரிவை அடக்கி வைக்க வேண்டும்.

கால ஓட்டத்தில், நசுங்கியவர்கள் எழுச்சி பெற்றால், நசுங்கியவர்க்காக பொய் கண்ணீர் வடித்து அவர்களை கொண்டு முன்னர் ஆதிக்க இனமாக காட்டப்பட்டவரை அடக்கி கீழிறக்க வேண்டும்.

உண்மையான ஆதிக்க இனம்

பொய்யான ஆதிக்க இனம் நசுக்கப்பட்ட இனம்

ஆக இவ்விரு பிரிவனரும் ஒருவரை ஒருவர் தாக்கி அழித்து கொள்வார்கள் அவர்கள் இனம் அழியும்.

ஆனால் உண்மையான ஆதிக்க இனம் வளரும்.

தொடர்ந்து அதே இடத்திலிருந்து ஆட்சி செய்யும்

## 4-10 ஆதிக்க அரசில் அதிகாரிகள் நிர்வாகம்

1) கீழ் இரண்டு அடுக்கு நிர்வாகம் காவலர், அலுவலர், ஒற்றர்) அந்த நிலபகுதியின் பூர்வகுடிகளால் நிரப்பட்டிருக்க வேண்டும்.

2) மேல் அடுக்கு நிர்வாகத்துக்கு (மேல் அதிகாரிகள்) அந்த இனத்துக்கு அந்நியமான வேறு இனத்தில் இருந்து அதிகாரியை நியமிக்க வேண்டும். அப்போது அவர்களுக்கும் பூர்வகுடிகளுக்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் அவர்களை நசுக்கி ஆதிக்க அரசுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

3) அந்த வேற்று இன மேல் அதிகாரிக்கு, ஆதிக்க அரசு தன்னுடைய உளவு அமைப்பு மூலம், அப்பூர்வகுடிகளை பிரிவினைவாதிகள், தீவிரவாதிகள், இனவெறியார்கள் என அடிக்கடி அறிவுறுத்தி கொண்டிருக்க வேண்டும்.

4) ஆதிக்க அரசின் உளவு அமைப்பு திட்டமிட்ட சதி மூலம், உள்நாட்டு கலவரத்தை தூண்டி, பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் அரசை திடபடுத்த வேண்டும். வதந்திகள், படுகொலைகள் மூலம் பூர்வகுடிகளுக்குள் சண்டை முட்டி அழித்து கொள்ள வைக்க வேண்டும்.

5) அந்த பிரச்சனைகளை காரணம் காட்டி, வேற்று இன மேல் அதிகாரி மூலம் பூர்வகுடிகளை இரும்புகரம் கொண்டு அடக்கி, நசுக்கி, எதிர்காலத்தில் பயத்துடன் வாழ வைக்க வேண்டும்.

6) மேல் அதிகாரிகளாக வேற்று இனத்தினரை நியமிப்பதால் ஏற்படும் பயன்கள்.

1) அதிகாரிகளும், பூர்வகுடிகளும் வெவ்வேறு இனமாக இருப்பதால் இன வேறுபாடு மற்றும் அதிகாரம் காரணமாக அந்த அதிகாரிகள் ஆதிக்க எண்ணத்துடன் ஆதிக்க அரசுக்கு விசுவாசமாக இருப்பார்கள்.

2) பூர்வகுடியிலிருந்து தகுதியுடைய மேல் அதிகாரிகள் உருவாகாமல், பல வழிகளை கையாண்டு தடுப்பார்கள், தகுதியிழக்க செய்வார்கள், கடும் நெருக்கடிகளை உண்டு செய்வார்கள்.

3) பூர்வகுடியை சேர்ந்த சுயநலமிக்க அலுவலர்களுக்கு இவர்கள் அரணாக இருப்பார்கள் அதன் மூலம்

சுயநலமிக்க பூர்வகுடி அலுவலர்கள் தங்களுடைய சுயலாபத்துக்காக மற்ற பூர்வகுடி சக அலுவலர்களையும், சொந்த மக்களையும் காட்டி கொடுத்து கொண்டு மேல் அதிகாரிக்கு நம்பிக்கையுடன் விசுவாசத்துடன் இருப்பார்கள்.

## 4.11 <u>படிநிலை அதிகார வார்க்கத்தை தேர்ந்தெடுப்பது எப்படி?</u>

ஒவ்வொரு மேல்நிலை அதிகார அடுக்குக்கும், அதிகபட்ச போட்டி இருக்குமாறும், குறைந்தது 4க்கு மேற்பட்டவர்கள் போட்டியிடுமாறும் பார்த்து கொள்ள வேண்டும்.

அவர்களின் யார் அதிக சுயநலம் உடையவரோ? யார் ஆதிக்க அரசின் நலன் காப்பவதோ? யார் ஆதிக்க இனத்துக்காக எதையும் செய்ய துணிபரோ? அவரை அந்த பதவிகது தேர்தெடுக்க வேண்டும்.

இது அதிகார அமைப்பு முழுமைக்கும் புரியும் போது ஆதிக்க அரசுக்கு, ஆதிக்க இனத்துக்கு, அரசு அதிகார அமைப்பு முழுவதும் அதிகபட்ச விசுவாசத்தை காண்பிக்க முயல்வார்கள்.

அதன் மூலம்,

பூர்வகுடிகளை கொண்டே, பூர்வகுடிகளை நசுக்கும், அழிக்கும் திறனுள்ள ஒரு அதிகார வர்க்கம் அமைக்கப்படும்.

## 4.12 ஆதிக்க அரசில் அதிகாரிகள் எப்படி நடக்க வேண்டும்?

மேல்மட்ட அதிகாரிகளை நியமிக்கும் போது, அவர்களுக்கு பணவெறி மிக்க சுயநலமிக்க அதிகாரியை நியமிக்க வேண்டும். அதிகார போதையை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் கீழ்மட்ட அதிகாரிகள் மற்றும் மக்களை கேவலமாக நடத்த வேண்டும்.

**பயன்கள் :**

1) பூர்வகுடியினரில் உள்ள துரோகிகள், சுயநலமிகள் அரசுக்கு துணை நிற்பார்கள்.

2) கீழ்மட்ட அதிகாரிகள், மக்களையும், அவர்கட்கு கீழ் வேலை செய்பவர்களையும் அதிகாரம் செய்வார்கள் நசுக்குவார்கள்.

3) ஆக, இந்த படிநிலை அதிகார அமைப்பு முழுவதும், ஆதிகார போதையின் அடிப்படையில் அமைக்கப்படுவதால்,

4) ஒரு படிநிலை அடிமைதளத்தை உண்டாக்கும்.

5) ஆதிக்க அரசு நல்ல தன்மையுடன் செயல்பட்டாலும் அதன் மேல்மட்ட அதிகாரிகளின் மீது குற்றங்களும், பழிகளும் சுமத்தப்படுவதால் அரசு நீடித்திருக்கும்.

# பகுதி -5

## இனவாத ஆதிக்க அரசு (இ.ஆ)

5 - 1 ஆதிக்க அரசின் தொழில் நுட்பம் - இனவாத தொழில்நுட்பம்

5 - 2 பாரம்பரியமான இனத்தை, தேசத்தை, கலாசாரத்தை அழிக்கும் முறை

5 - 3 ரத்த உறவுள்ள இனக்குழுவை சிதற அடிக்கும் முறை

5 - 4 மணமுறை ஊடுருவல் இன ஆதிக்கம் -

5 - 5 கலப்பின இனவழி ஆதிக்கம் -

5 - 6 கலப்பினத்தவரால் ஏற்படும் பயன்கள் -

5 - 7 கலப்பினத்தவர் பூர்வகுடியினரை நசுக்கும் காரணங்கள் -

5 - 8 இனவாத ஆதிக்கத்தை எதிர்க்கும் இனத்தை கையாளுதல்-

5 - 9 பூர்வகுடிகளின் எதிர்ப்பை முற்றிலும் அழித்தல்-

5 - 10 ஆற்றல் மிக்க பூர்வக்குடிமக்களை அடக்குதல்

## 5-1 இனவாத ஆதிக்க அரசு

ஆட்சி, ஆதிகாரம் மற்றும் மேல்மட்ட அதிகார வர்க்கம் முழுவதும் தன் இனத்தால் நிரப்ப வேண்டும். கலப்பினத்தை உருவாக்கி அவர்கள் மூலம் பூர்வகுடிகளை நசுக்க வேண்டும்.

## 5-2 ஒரு பாரம்பரியமிக்க இனத்தை / தேசத்தை / கலாசாரத்தை அழிக்க என்ன செய்ய வேண்டும்?

அழிக்க விரும்பிய நாட்டிற்கு தன்னுடைய மதத்தையும், கல்வி முறையையும் பரப்ப வேண்டும்.

அதன் மூலம் இனங்களை பிளவுபடுத்த வேண்டும்.

அவ்வாறு மாறியவர்கள் மூலம் தமக்கு சாதகமான கலாசார பண்பாட்டை பரப்ப வேண்டும்.

**சாதகமான என்றால்?**

குடிகளின், ஆண்மை, பெண்மை தனத்தையும், உடல் நலத்தையும் பாதிக்கும். மது, புகை போன்ற போதை பழக்கங்களை ஏற்படுத்த வேண்டும். அதை பெருமைமிக்கதாய் நினைக்க வைக்க வேண்டும்.

காமத்தை முறையற்றதாக மாற்ற வேண்டும், அதிகமாக எதிர்பாலினரிடம் உறவு கொள்வதை வீரமாக, பெருமையாக, இன்பமானதாக, இயல்பானதாக உருவகம் செய்யவேண்டும்.

இவைகளின் மூலம், ஆரோக்கியம், மனநலம், ஆண்மை / பெண்மை தன்மை நாளடைவில், தலைமுறைகளில் குன்றும் போது, ஆந்த இனத்தின் வீரம், விடுதலை உணர்ச்சி குன்றி தானே விரும்பி அடிமைகாக மாறுவர்.

## 5.3 ரத்த உறவுள்ள இனகுழுவை சிதறடிப்பது எப்படி?

மொழி, மொழிக்குள் ஒலி வேறுபாடு அதை மேம்படுத்தி எழுத்து வேறுபாடு உண்டாக்குதல், புதிய மொழியை உண்டாக்குதல்.

மதம், உட்பிரிவு, புதிய மதத்தை திணித்தல், ஏற்றுகொள்ளச்செயதல்.

செல்வ வேறுபாட்டை உருவாக்குதல்

கலப்பு திருமணங்கள் மூலம் இனகுழுவை சிதைத்தல்

பழக்க வழக்கம், பண்பாடு, கலாசார வேறுபாடுகளை உண்டாக்குதல் உடை வேறுபாடு

என சின்ன சின்ன விஷயங்ளை கூட உண்டாக்கி பிரபலபடுத்தி, அதனால் உயர்ந்தவர்கள் என பெருமைபடுத்தி, மிக எளிதாக இனகுழுவை உடைக்கலாம், பிரிக்கலாம்.

**இதற்கு எதிர் மையத்தில்.**

இரத்த உறவுள்ள ஒரே இனக்குழு மேற்கண்ட பல்வேறு முகமுடிகளை அணிந்து கொண்டு, மற்ற மக்களை பாகுபடுத்தி, பிரிந்து தன் மேலாண்மையை நிறுவி.

தன் இனத்தை பேணலாம்.

மற்ற இனத்தை அடிமைபடுத்தலாம்.

## 5-4 <u>மணமுறை ஊடுருவல் இன ஆதிக்கம்</u>

ஒரு இனம், ஒரு நாட்டை கட்டுபடுத்த முயலும் போது, அந்த நாட்டில் செல்வாக்கு மிக்க, செல்வம் மிக்க தலைவர்களின் குடும்பங்களில் தன் இன கலப்பை உண்டு பண்ண வேண்டும். அதை குறிப்பிட்டு அவர்களுக்குட்பட்ட மற்றும் சாமானிய மக்களிடம் தம்முடைய அதிகாரத்தை நிலைபடுத்தி கொள்ள வேண்டும்.

இரண்டாம் கட்டமாக இன கலப்பு ஏற்படுத்தப்பட்ட குடும்பங்களின் அடுத்த தலைமுறை குழந்தைகளை தமக்கு சார்பாக கல்வி புகட்டி வளர்க்க வேண்டும்.

மூன்றாவதாக அவர்கள் வளர்ந்தவுடன் மீண்டும் தன் இனத்திலேயே மணம் செய்ய வேண்டும்.

இவ்வாறாக, மீண்டும், மீண்டும் தலைமுறை தலைமுறையாக மணம் செய்யும்போது.

அந்த குடும்பம் பழைய குடும்ப பெயரில் ஆனால் புதிய இனமாக, ஆதிக்க இனமாக, நாட்டை கட்டுபடுத்த நினைக்கும் இனமாக மாறிவிடும்.

மக்களும் பழைய குடும்ப பெயரை கொண்டு, அந்த குடும்பத்தை பழைய குடும்பமாக முட்டாள்தனமாக நம்புவார்கள்,

## 5.5 கலப்பின இனவழி ஆதிக்கம்

இனவழி ஆதிக்கம் (ஆதிக்க இனவாதம்) செய்யும்போது தேசத்தின், சமூகத்தின், உயர்மட்டம் முழுவதும் தன் தூய இனத்தினால் நிரப்பட்டு ஆட்சி செய்தாலும் ஆள் பற்றாகுறை ஏற்படும்.

அப்போது என்ன செய்ய வேண்டும்?

ஆதிக்கம் செலுத்த வேண்டிய நாட்டில் வாழும் பூர்வகுடி இன பெண்களை எந்த வகையிலாவது பயன்படுத்தி தன் இன ஆண்கள் மூலம், அதிகபட்ச கலப்பினத்தை உண்டு பண்ண வேண்டும்.

அந்த கலப்பின மக்களுக்கு உயரிய அந்தஸ்து, சிறப்புரிமை, செல்வம் போன்றவற்றை தந்து, சமூகத்தில் தமக்கு (ஆதிக்க இனத்துக்கு) ஏறக்குறைய சமமானதாக காட்ட வேண்டும்.

ஆனாலும் / அதே நேரம், அந்த கலப்பினம் மேல் மட்டத்தில் கலக்கவிடாது இன தூய்மை காக்க வேண்டும்.

## 5.6 கலப்பினத்தவரால் என்ன லாபம்?

1) கலப்பினத்தவர் தம்மை உயர்வாக கருதி கொண்டு வந்தேறி ஆதிக்க இனத்தைவிட தீவிரமாக பூர்வகுடிகளை கேவலமாக நடத்துவார்கள்.

2) பூர்வகுடிகளை என்றும் அடிமையாக வைத்திருக்க உளவு, ஆதிக்கம், அழிந்தொழித்தல், நசுக்குதல், பிரச்சாரம், பிரித்தாளுதல் என பல வகை உத்திகளை கலப்பினத்தவரே செய்வார்கள்.

இதனால் ஆதிக்க இனகுழுவுக்கு வேலை குறையும்.

3) பரம்பரையாக ஒரு மதத்தில் இருப்பவரை விட புதிதாக அந்த மதத்தில் சேர்ந்தவர், தீவிரமாக அந்த மதத்தை கடைபிடிப்பதாக காணலாம்.

அது போலவே, ஆதிக்க இனகுழுவின் சித்தாந்தத்தை, அரசை நிலைநிறுத்துவதும், தீவிரமாக கடைபிடிப்பதும், பூர்வ குடிகளை இழிவுபடுத்தி நசுக்குவதிலும் இவர்கள் முன்னிலை வகிப்பர்.

அதன் மூலம், தன்னை தூய்மையான ஆதிக்க இனகுழுவை சேர்ந்தவர் என காட்டி கொள்வர்.

## 5-7 கலப்பினத்தவர் பூர்வகுடிகளை நசுக்கும் காரணங்கள்

உடல் அமைப்பை கவனித்து பார்த்தால், உண்மையான ஆதிக்க இனக்குழுவுக்கும் கலப்பினத்திற்கும் உள்ள வேறுபாடு தெள்ள தெளிவாக தெரியும்.

நிறம், உடல் அமைப்பு, ரோமம், கண்விழி, உதடு, முகம், தாடை அமைப்பு, மூக்கு, உயரம் ஆகியவற்றை கொண்டு எளிதாக கண்டுபிடித்து விடலாம்.

இந்த வேறுபாடுகள் கலப்பினத்தவர்களுக்கு நன்றாக தெரியும். அதனால் உளவியல் ரீதியாக கடும் பாதிப்பும், பயமும், தாழ்வு மனபான்மைம் ஏற்படுகிறது.

அதன் மாற்றாக அவர்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்றும், ஆதிக்க இனத்தவர், உயர் குலத்தினர் என்றும் காட்டி கொள்கின்றனர்.

இந்த செயல்பாடு, உண்மையான ஆதிக்க இன குழுவுக்கு சாதகமாக பூர்வகுடிகளை, கட்டுபடுத்துவதற்கும், நசுக்குவதற்கும் பயன்படுகிறது.

ஆனாலும் ஆதிக்க இனகுழுவின் மேல்மட்டத்தில் இவர்களுடன் இன கலப்பு (மண முறை) செய்ய மாட்டார்கள்.

உண்மையில் இந்த கலப்பினத்தவர் பரிதாபத்துக்கு உரியவர்கள்.

## 5-8 இனவாத ஆதிக்கத்தை எதிர்க்கும் இனத்தை கையாளுதல்

அ) பூர்வகுடிகளிடம் எதிர்ப்புணர்ச்சி தீவிரமாக இருக்கும் போது, முதல் நிலை, இரண்டாம் நிலை என அனைத்தையும் அவர்கள் கைபற்றி கொள்ளும் போது, சரணாகதி அடையவேண்டும், அறியாமல் தவறு செய்து விட்டோம் என மன்னிப்பு கேட்க வேண்டும்.

முழுமையான அவர்களுடைய தலைமையை ஏற்று அவர்களை போற்றி புகழ வேண்டும் அடங்கி நடக்க வேண்டும்.

ஆ) காலம் தாழ்த்தி, சிறிது சிறிதாக முதல் நிலை, இரண்டாம் நிலை அதிகார வர்கத்தை தம்முடைய இனத்தாலும் / தமக்கு கட்டுபட்ட நுண்ணறிவு முடக்கப்பட்ட வேறு இனத்தாலும் இட்டு நிரப்ப வேண்டும்.

2 அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், மத தலைவர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், வர்த்தக நிறுவனங்கள், நிதிதுறை, சமூக காவல் துறை, தேச பாதுகாப்பு துறை போன்று அனைத்திலும் மூன்றாம்தர, நான்காம்தர அலுவலர்களுக்கு, அடிமை வர்க்கமாக / சேவகத்துக்கு / சேவைக்கு மட்டுமே அந்த நாட்டின் பூர்வகுடியை சேர்ந்த மக்களை வைத்திருக்கவேண்டும்.

3) முதல் இரு நிலைகளிலும், மத்திய நிலைகளிலும், அதிகாரவர்க்கத்தின், தலைமையிலும் தம்மால் சித்தாந்தம், மதம், மொழி, இனவாதம், கல்வி போன்ற ஏதேனும் வழிமுறைகளால் நுண்ணுறிவு முடக்கப்பட்ட அல்லது மூளை சலவை செய்யப்பட்ட மனித சமநிலை நீதி பாதிக்கப்பட்ட, தன்முனைப்பும், தன் இனம் உயர்ந்தது என நினைக்கும் வேறு இனத்தவரை கொண்டு நிரப்ப வேண்டும். அவர்களை தொடர்ந்து உளவு துறை கண்காணிப்பில் வைக்க வேண்டும்.

**பயன் :** இப்படி மேல்நிலையில் தந்திர, இனவாத ஆதிக்க இனத்தவரால் நிரப்பப்பட்டு தலைமை பொறுப்பு வகிக்கும் வேற்று இனத்தவர் அந்த தந்திர இனவாத ஆதிக்க இனத்துக்கு விசுவாசமாக இருப்பதோடு பூர்வகுடிகளை நசுக்குவார்கள்.

4) படிநிலை அதிகாரத்தில் படிநிலை அதிகாரத்தின் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு வரும் தகுதியும், திறமையும் உள்ள பூர்வகுடிகளை நசுக்குதல்.

அந்த பூர்வகுடி அதிகாரிகளின் ஒற்றுமையை குலைத்து பிரித்து ஆள்வதன் மூலமாகவும், அவர்கள் திறமையற்றவர்கள், தகுதியற்றவர்கள், ஊழல்வாதிகள், ஒழுக்க குறைவானவர்கள், குற்றவாளிகள், தேச துரோகிகள் என பல முறைகளில் குற்றம் சாட்டி அழிக்க வேண்டும்.

- அதையும் மீறி முன்னேறுபவர்களுக்கு கடும் நெருக்கடிகளை கொடுத்து சூழ்நிலை கைதியாக வைத்திருக்க வேண்டும்.
- ஆனால் பூர்வகுடியினரில் இனதுரோகிகள், சுயநலமிகள் போன்றவர்களை எளிதாக மேல் பதவியில் நியமிக்க வேண்டும்.

## 5- 9 பூர்வகுடிகளின் எதிர்ப்பை முற்றிலும் அழித்தல்

1) பூர்வகுடியினரின் மிதவாத எதிர்ப்புகளை வழக்கமான முறையில் அழிக்க வேண்டும்.

2) பூர்வகுடியினரின் ஆயுதம் தாங்கிய எதிர்ப்புகளை நன்கு வளரவிட வேண்டும்.

தந்திர இனவாத ஆதிக்க முறையில், சித்தாந்த முறையில், ஊடுருவி அவர்களை திசைதிருப்பி, பூர்வகுடி முன்னால் தலைவர்களை அவர்கள் குடும்பங்களை அழித்தொழிக்க வேண்டும்.

அதனால் அந்த நாட்டிற்கு யார் உண்மையான எதிரிகள் என அறிந்த பழயைான இன குழு தலைவர்களையும் வேறு இனமக்களையும் ஆயுதம் தாங்கிய உள்நாட்டு குழுக்களே அழித்துவிடும். வந்தேறிகளுக்கு வேலை குறையும்.

## 5- 10 ஆற்றல் மிக்க பூர்வகுடி மக்களை அடக்குதல் எப்படி?

**i) அழித்தல்**

அவரின் எதிர்தரப்பினரை கொண்டு, அழிக்க வேண்டும்.

**ii) குற்றவாளிகளாக ஆக்குதல்**

ஆற்றல் வாய்ந்தவர்களின், நண்பர்கள் மூலமோ, குடும்பம் மூலமோ ஆசை போன்றவற்றின் மூலமோ திசை திருப்பி குற்றவாளியாக மாற்ற வேண்டும்.

**iii)** **<u>குற்றவாளிகளாக சித்தரித்தல்</u>**

அவ்வாறு திசை திரும்பாதவர்களை பொய்யான வதந்திகள் மூலம் குற்றவாளிகளாக செய்தி பரப்புதல். பின்பு பொய்யான ஆதாரங்களை உருவாக்கி குற்றவாளிகளாக சித்தரித்து பின் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும்.

**iv)** **<u>அதே இனத்தவரை கொண்டு அழித்தல்</u>**

ஆதிக்க அரசு, தன்னுடைய சமூக காவல் படை, தேச எல்லை காவல்படை ஆகியவற்றில் இருந்து அதே இனத்தை சேர்ந்த அதே உட்பிரிவை சேர்ந்த அதிகாரியை தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும்.

குற்றவாளியாக சித்தரிக்கப்பட்டவரை பிடிக்கும், கொல்லும் அதிகாரத்தை அவரிடம் வழங்க வேண்டும்.

பூர்வகுடி அதிகாரி அப்பணியை மேற்கொள்ளும் போது ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அவ்விருவருக்கும் தனிப்பட்ட பகை உண்டாகும். இல்லையேல் உளவு படையை கொண்டு, தனிபட்ட பகையை உருவாக்க வேண்டும். அப்பகை பெருகி வளர்ந்து அந்த பூர்வகுடி அதிகாரியே, அந்த ஆற்றல் மிக்கவரை அழித்து விடுவார்.

**v)** **<u>எதிர் இனத்தவரை கொண்டு அழித்தல்</u>**

ஆதிக்க அரசின் பிரித்தாளும் சூழ்ச்சியினால் ஏற்கனவே பூர்வகுடியினர் பிரிக்கப்பட்டிருப்பார்கள்.

ஆற்றல் மிக்கவரின் எதிர் இனத்திலிருந்து அதிகாரியை தேர்ந்தெடுத்து அப்பணியை வழங்க வேண்டும் பிடிக்கும், கொல்லும் அதிகாரம் கொடுத்து தனிப்பட்ட பகை வளர்க்க வேண்டும்.

**<u>பயன்கள்</u>** :

1) அந்த ஆற்றல் மிக்கவர் அழிக்கப்படுவார்
2) அதன் காரணமாக பூர்வகுடிகளுக்குள் ஏற்கனவே உள்ள பகைமை அதிகரிக்கும்.
3) அந்த பகை ஆதிக்க அரசின் பிரிந்தாளும் தன்மையை பலப்படுத்தி அரசை ஸ்திரப்படுத்தும்.

# பகுதி -6

# தந்திர இனவாத ஆதிக்கம் (த,இ,ஆ)

6 - 1 தொழில் நுட்பம்

6 - 2 தந்திர இனவாத ஆதிக்கம்

6 - 3 முதல்நிலை தவிர்த்தல்

6 - 4 துண்டிவிடல்

6 - 5 தலைவர்களை அழித்தல்

6 - 6 மக்களை கட்டுபடுத்தல்

6 - 7 இன ஒழிப்பு

6 - 8 த.இ.ஆ. சிறப்பு செயல்பாடுகள்

6-8-1 ஊடாடுதலின் அவசியம்

6-8-2 எப்படி ஊடாடுவது

6-8-3 இன எதிரியை அழித்தல்

6 - 9 த.இ.ஆ. மக்களை கட்டுப்படுத்தல் - அழித்தல்

6-9-1 புகழ்ந்து உயர்த்தி அழித்தல்

6-9-2 இழித்து நசுக்கி அழித்தல்

## 6-1 தந்திர இனவாத ஆதிக்கம்

ஒரு இனம், ஒரு துளி இரத்தம், ஒரு உயிர் கூட இழப்பு ஏற்படாமல், தன் இனத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டி, கலப்பினத்தை உருவாக்கி, படிபடியாக மற்ற இனங்களை அழிக்கும்.

## 6-2 தந்திர இனவாத ஆதிக்கம்

பெருமளவு பூர்வகுடிகள் இருக்கும் நாட்டில் எண்ணிக்கையில் குறைந்த வந்தேறிகள் ஆதிக்கம் செலுத்த தந்திரங்களை கையாள வேண்டும்.

## 6-3 முதல் நிலை தவிர்த்தல்

அதிகாரம், செல்வம், செல்வாக்கு குவியும் இடத்தில் முதல் நிலையில் (மேல்நிலை, மேல் பதவி) பூர்வகுடி தலைவர்களை அமர வைத்து அவர்கள் நுண்ணறிவை முடக்கி, சுகபோகத்தில் ஆழ்த்தி கைபாவையாக்க வேண்டும்.

பின் தம் இனத்தவரை இரண்டாம் நிலையிலிருந்து மத்திய பகுதிவரை நிரப்பி அதிகாரம் செல்வம் செல்வாக்கு மையங்களை தம் கட்டுபாட்டில் கொண்டுவந்து தம் இனத்தை வளமாக்கி இனபெருக்கம் செய்து கொள்ள வேண்டும்.

பின்பு பிரித்தாளுதல் மூலம் பூர்வகுடிகளுக்குள் பகை உண்டாக்கி அவர்களை ஒழித்து விட வேண்டும்.

மற்றைய பூர்வகுடி மக்களிடமும், தலைவர்களிடமும் நயந்து கொண்டு யார் வெறுப்புக்கும் ஆளாகாமல் புத்திசாலிதனமாக செய்யவேண்டும்.

## 6-4 தூண்டிவிடல்

பூர்வ குடியினரின் எல்லா பிரிவினருக்குள்ளும் ஊடுருவ வேண்டும். அங்கெல்லாம் வந்தேறிகள் குறிப்பிடுபவரே முதல் நிலைக்கு வரவேண்டும்.

பூர்வ குடியினருக்குள் ஒருவருக்கொருவர் தூண்டிவிட்டு கட்டுபாடு அற்றவராக ஆக்க வேண்டும். அவர்களுக்கு உள்ள மதிப்பை சிதைக்க / குலைக்க வேண்டும்.

சமூக ஒழுங்கை அதன் அமைப்பை சிதைக்க வேண்டும் / புதிய புதிய மொழிகளையும், மதங்களையும் உருவாக்க வேண்டும். புதிய புதிய குழுக்களையும் கலக கூட்டத்தினரையும் உற்பத்தி செய்ய வேண்டும்.

## 6-5 தலைவர்களை அழித்தல்

பூர்வ குடிகளின் எல்லா தலைவர்களின் இரண்டாம் நிலையில் இருக்க வேண்டும். அவர்களுக்குள் எப்போதும் பகை முட்ட வேண்டும், அவர்களை தவறான வழிகளில் செயல்பட வைக்க வேண்டும்

அவர்களுக்குள் எப்போதும் சண்டையிட்டு கொள்ளும் போது, தொடர்ந்து வலிமை குன்றி தானாகவே அழிந்து விடுவர்.

தலைவர்களின் செல்வ வளத்தை பறிக்க வேண்டும். மதிப்பை ஒழிக்க வேண்டும்.

**பயன்கள்**

1) வந்தேறிகள் பூர்வகுடிகளிடம் போரிடாமல் இரத்தம் சிந்தாமல், தன் இனத்தில் உயிரிழப்பு ஏற்படாது புத்தியினால் அவர்கள் இனத்தை கொண்டே அவர்களை அழித்தல்

2) நாடு வசமாகும்

## 6-6 மக்களை கட்டுபடுத்தல்

மதம், சித்தாந்தம், கல்வி, மருத்துவம், பணம் போன்ற பலவழிகளை பயன்படுத்தி பூர்வ குடிமக்களின் நுண்ணறிவை முடக்க வேண்டும்.

அவர்கள் உழைப்பை, அறிவை, செல்வத்தை சுரண்டி தம் இனத்தை வளமாக்கி இனத்தை பெருக்கி கொள்ள வேண்டும்.

பூர்வகுடி மக்களின் இந்நிலைக்கு காரணம் பூர்வகுடி தலைவர்கள் தான் என திசை திரும்ப வேண்டும்.

**<u>பயன்கள்</u>**

1) மேற்கண்ட முறையில் நுண்ணறிவு முடக்கப்பட்டு, திசை திருப்பப்படும் பூர்வகுடி மக்களின் கலக/ வன்முறை அமைப்புகளை கொண்டு, பூர்வகுடி தலைவர்களின் அனுபவ அறிவை மரபணுவில் பெற்றுள்ள அவர்களின் மரபை முற்றிலும் அழிக்கலாம்.

இப்படி திசை திருப்புவதன் மூலம் மக்களின் துன்பத்துக்கு உண்மையான காரணமான வந்தேறி ஆதிக்க இனமான தன் இனத்தை காத்து கொள்ளலாம்.

2) தலைமை பண்புகள், மரபுகளை, பாரம்பரியங்களை இழந்த பூர்வகுடிகளை பிரிந்து ஆள்வது கட்டுபடுத்துவது எளிது.

## 6-7 இன ஒழிப்பு

தந்திர இனவாத ஆதிக்கம் என்பது, ஆதிக்க அரசு, இனவாத ஆதிக்க அரசு போன்றவற்றின் மேம்படுத்தப்பட்ட வடிவம் ஆகும்.

அந்த வந்தேறிகளின் அரசு படிபடியாக பூர்வகுடிகளின் எண்ணிக்கையை பல தந்திரங்களை பயன்படுத்தி குறைக்கும், பின்பு அந்த இனத்தை முற்றிலுமாக அழித்து ஒழிக்கும்.

## 6-8 <u>இனவாத ஆதிக்கத்தின் சிறப்பு செயல்பாடுகள்</u>

ஆதிக்க அரசு, இனவாத ஆதிக்க அரசு

இவற்றைவிட தந்திர இனவாத ஆதிக்க அரசு எப்படி வேறுபாடு பெறுகிறது.

1) ஆதிக்க அரசிலும், இனவாத ஆதிக்க அரசிலும், தாம் அடிமையாக இருப்பதை, மாற்றாரால் ஆட்சி செய்யப்படுவதை பூர்வகுடிகள் வெளிபடையாக உணர்வார்கள். ஆதிக்க இனமும் தம்மை வெளிபடையாக காட்டி கொள்ளும்.

2) இந்த இடத்தில் தந்திர இனவாதம் நுணுக்கமாக செயல்படுகிறது. மக்கள் அடிமையாக இருப்பதை உணர்ந்தால்தானே சுதந்தரத்தை கேட்பார்கள். சுதந்திரமாக தான் இருக்கிறோம் என நினைக்க செய்தால?.

எப்படி சுதந்திரம் கேட்பார்கள்? ஆக மறைமுகமாக அடிமைதளையை பூட்ட வேண்டும்.

➢ தந்திர ஆதிக்கம் செய்யும் இனம் அவ்வப்பகுதி மக்களுடன் இணைந்து அவர்களை போலவே உண்டு உடுத்தி மண்ணின் மைந்தர்களாக காட்டி கொள்ள வேண்டும். ஆனால் தாங்கள் வந்தேறிகள் என்பதையும் ஆதிக்கம் செய்ய வேண்டும என்பதிலும் உறுதியாக இருக்க வேண்டும்.

## 6-8-1 ஊடாடுதலின் அவசியம்

➢ தந்திர இன ஆதிக்கம் செய்யும் இனத்தால் உருவாக்கப்பட்ட பொய்யான ஆதிக்க இனத்துக்கும், அவர்களால் அடக்கி வைக்கப்பட்ட இனத்துக்கும் இடையில் ஊடாடி, இரு இனத்துக்கும் தொடர்ந்து பிரச்சனையும், விரோதமும் இருக்குமாறு செய்ய வேண்டும்.

உண்மையான ஆதிக்கத்தை இருவரும் புரிந்து கொண்டு இருவரும் ஒன்றாகி விட்டால், தந்திர ஆதிக்க இனம் அழிந்துவிடும் அல்லது துரத்தப்படும்.

## 6-8-2 எப்படி ஊடாடுவது

தந்திர ஆதிக்கம் செய்யும் இனம்,

ஒவ்வொரு ஊரிலும்,

பிளவுபடுத்தப்பட்ட பூர்வ குடிகளின்.

இரண்டு பிரிவுகளுக்கு நடுவில், தன்னுடைய இனத்தை சார்ந்த அல்லது தன்னுடைய கலப்பினத்தை சார்ந்த ஒரு குடும்பத்தை குடி வைக்க வேண்டும்.

அதன் மூலம் இரு இனங்களின் அன்றாட நிகழ்ச்சிகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

மேலும் இரு பிரிவினரிடமும் பழகி, இருவரிடமும் நல்லவர்களாக நடித்து உள் எண்ணங்களை புரிந்து கொள்ள வேண்டும்.

இரு பிரிவினரிடமும் புறம் கூறி தொடர்விரோதம், சண்டை, சச்சரவுகளை ஏற்படுத்த வேண்டும்.

முக்கிய நிகழ்ச்சிகளை தம் இன ஆதிக்க தலைமைக்கு தெரிவிக்க வேண்டும்.

தன்னுடைய தந்திர ஆதிக்க இனத்துக்கு, எதிராக ஒரு இன எதிரி உருவானால், ஆதிக்கத்துக்கு எதிராக யாரும் உருவானால் அந்த எதிரியை பற்றி தலைமைக்கு தெரிவிக்க வேண்டும்.

### 6-8-3 இன எதிரியை அழித்தல்

இன எதிரியை கூட்டாக சேர்ந்து எந்த வழியிலாவது ஒழிக்க வேண்டும்.

அல்லது அந்த இனத்துக்கு உள்ளேயே வதந்திகளை கிளப்பி, சண்டையை உருவாக்கி அழிக்க வேண்டும்.

### 6-8-4 பிரித்து ஆளுதல்

தந்திர இனவாத ஆதிக்க இனத்தால் அமர்த்தப்பட்ட இனகுடி மூலம்,

இரு ஊர்களுக்கு நடுவிலும்,

ஓரே ஊரில் இரு இனங்களுக்குள்ளும்,

ஓரே குடும்பத்துக்குள்ளும், இரு குடும்பங்களுக்கு நடுவிலும் வதந்திகள், பரம்பரை கதை என

பொய் கதைகள் மூலம், பகை வளர்த்து பிரித்து ஆளலாம்.

## 6 - 9 தந்திர இனவாத ஆதிக்கம்

மக்களை கட்டுபடுத்தல் மற்றும் அழித்தல்

ஒரு இனத்தை அழிக்க இருவழி உண்டு

1) புகழ்ந்து உயர்த்தி அழித்தல்

2) இழித்து நசுக்கி அழித்தல்

## 6 -9 -1 புகழ்ந்து உயர்த்தி அழித்தல்

பூர்வகுடி தலைவர்களை, செல்வந்தர்களை, அறிவின்மிக்காரை, உயர்த்தி பேச வேண்டும். மற்றவரை விட அதிகம் உயர்ந்தவர்களாக மதித்து வர வேண்டும். அவர்களுக்குள் ஒருவரை விட மற்றவர் உயர்ந்தவர் என்ற எண்ணத்தை உருவாக்கி மாற்றாரை இழிந்து பேச வைக்க வேண்டும். அவர்களுக்குள்ள மோதவைத்து, அவர்களை கொண்டே அவர்களை அழிக்க வேண்டும்.

**பயன்** : பூர்வகுடி தலைவர், செயலர், அறிவர் தங்களுக்குள் மோதி வலிமை இழப்பர்.

## 6-9-2 இழித்து நசுக்கி அழித்தல்

பூர்வகுடி மக்களை இழிந்தவர்களாக நடத்த வேண்டும் பூர்வகுடி தலைவர்களை கொண்டே மக்களை நசுக்க வேண்டும். அவர்கள் உழைப்பை உறிஞ்ச வேண்டும் அவர்களை பஞ்சம், பட்டினி வறுமையிலேயே வைக்க வேண்டும்.

பூர்வகுடி மக்களின் காப்பாளரான அவர்கள் தலைவர்களை கொண்டே நசுக்கும் போது,

ஆட்சியினருக்கும், குடியினருக்கும் பிளவும், அதனால் மாறாத வடுவும், பரம்பரை பழியும் உண்டாகும்.

**<u>பயன்</u> :** ஒரு காலத்தில் பூர்வகுடி தலைவர்கள் உண்மையை உணர்ந்து கொண்டு, ஆதிக்க வாதிகளை ஒழிக்க முற்படும் போது, பெரும்பான்மையான பூர்வகுடி மக்களின் சக்தியை, மக்களின் துணையை ஆதரவை இழந்துவிடுவர்.

இது தொடர்ந்து ஆதிக்கம் செலுத்த வழிவகுக்கும்

# பகுதி -7

## மூவகை ஆதிக்க அரசுகளின் பொது தொழில் நுட்பங்கள்

**7 - 1** **கலைகள்**

7-1-1 கலையை ஆயுதமாக பயன்படுத்தல்

7-1-2 குடும்பம் மீது தாக்குதல்

7-1-3 குடிகள், இனகுழு மீது தாக்குதல்

**7 - 2** **மொழி**

7-2-1 மொழி வழி நசுக்குதல்

7-2-2 ஒரு மொழியை எப்படி இரண்டாக உடைப்பது

7-2-3 மொழி வழி இனப்பிரிப்பு

**7 - 3** **ஆற்றல் மிகு மக்கள்**

7-3-1 ஆற்றல், திறன் மிக்கவரை பிரித்தெடுத்தல்

7-3-2 ஆற்றல், திறன் மிக்கவரை மயக்கப்படுத்தல

7-3-3 பூர்வகுடி மக்களிடமிருந்து எழும் ஆற்றல் மிக்கவரை அடக்குவது எப்படி?

**7 - 4** **ஆற்றல் மூலங்கள்**

7-4-1 நிலத்தின் மீது தாக்குதல்

7-4-2 நீரின் மீது தாக்குதல்

அ) மழை நீர்

ஆ) ஆற்று நீர்

இ) நிலத்தடி நீர்

ஈ) கடல் நீர்

7-4-3 நெருப்பின் மீது தாக்குதல்

7-4-4 காற்றின் மீது தாக்குதல்

7 - 5 இன குழு ஆதிக்கத்தின் இறுதி லட்சியம்

7 - 6 ஆதிக்க அரசுகளின் இறுதி லட்சியம் என்னவாக இருக்கவேண்டும்

## 7-1 கலைகள்

ஒரு நாட்டில் கலைகள் எந்த உணர்ச்சியை அதிகம் வெளியிடுகின்றனவே, அவ்வுணர்ச்சிகள் அந்நாட்டு மக்களுக்கு அதிகரிக்கும்.

### 7-1-1 கலையை ஆயுதமாக பயன்படுத்தல்

ஒரு நாட்டை தொடர்ந்து அடிமையாக வைத்திருக்க கலைகளை எப்படி பயன்படுத்த வேண்டும்?

ஒரு நாட்டின் அடிப்படை அலகான குடும்பம், குடிகள் மற்றும் இன குழுக்கள் மீது கலைகளை ஆயுதமாக பயன்படுத்த வேண்டும்.

'திருமணம் என்பது இரு குடும்பம், குடிகள் இணையும் உணர்வு ரீதியான நிகழ்ச்சி'

### 7-1-2 குடும்பம் மீது தாக்குதல

குடும்பத்தின் அடிப்படை. நம்பிக்கை. இந்த நம்பிக்கையை உடைக்க கலைகள் வழியே, நாடகம், கவிதை, கதை, நாட்டியம், ஓவியம் போன்றவற்றின் வழியே முறையற்ற காமம், முறையற்ற வாழ்க்கை, பயம், அடிமைதனம் போன்றவற்றை தொடர்ந்து பரப்பிவர வேண்டும்.

நாளடைவில் மக்கள் இது தான் இயல்பான வாழ்க்கை என நினைத்து முறையற்ற வாழ்வில், ஒழுக்கம் தவறி வாழும் போது நாட்டின் அடிப்படை அலகான குடும்பம், நம்பிக்கை இழந்து, குடும்ப அமைப்பு சிதைவுறும்.

### 7-1-3 குடிகள், இன குழுக்கள் மீது தாக்குதல

கலை, ஊடகம் வழியே அதிகபடியான ஒழுக்க சிதைவு, காமம், காதல் போன்றவற்றை தவிர உலகில் வேறு எதுவும் இல்லை என்ற தோற்றத்தை வாலிபத்தினர்,

இளையர், நடுத்த வயதினர், மத்தியில் ஏற்படுத்தி, மாற்று இன குழுக்கள், குடிகளுடன் மணஉறவு, இணைதேடுதல், எண்ணற்ற, முறையற்ற பாலுறவு நடவடிக்கை போன்றவற்றை அதிகபடுத்த வேண்டும்.

அப்போது வெவ்வேறு இன குழுக்களுடன் தொடர்ந்து சண்டை, பிரச்சனைகள் உண்டாகும். தொடர் பகைமையை உண்டாக்கலாம். இன குழுக்களுடன் ஒற்றுமையின்மையை உண்டாக்கலாம்.

இவ்வழி முறை ஒரு நாட்டை தொடர்ந்து அடிமையாக வைத்திருக்க சிறந்த முறையாகும்..

## 7-2 <u>மொழி</u>

ஒரு மொழியை அழிப்பதன் மூலம் ஒரு நாட்டை அழிக்கமுடியும்

## 7-2-1 <u>மொழி வழி நசுக்குதல்</u>

ஆதிக்க அரசில் தலைவர்கள், அதிகாரிகள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், மதகுருகள், தொழில் நுட்ப வியலர்கள் அணுக முடியாத அளவு திறமைசாலிகளாகவும், அறிவின் மிக்காராகவும், அந்த பதவிகள் கடினமானதாகவும் காட்ட வேண்டும்.

அதற்கு என்ன செய்ய வேண்டும்?

பூர்வகுடியினரின் மொழியற்ற வேறு மொழியை ஆதிக்க இனத்தினர் கையாள வேண்டும். அது உயர்ந்தது என கூற வேண்டும்.

அந்த வேற்று மொழியையும் பூர்வகுடிகள் கற்றுவிட்டால் ஆதிக்க இனத்தினர் வேறு மொழிக்கு தாவிவிட வேண்டும். அல்லது மீண்டும் பழைய மொழிக்கே செல்ல வேண்டும்.

<u>**பயன்**</u>

1) அதிகார மட்டத்துக்கு போட்டி குறையும்

2) திறமையான பூர்வகுடிகள் கூட அந்த வேற்று மொழியில் திறனற்று இருப்பதால் போட்டியிட முடியாத சூழல் ஏற்படும்.

3) அவர்கள் வேற்று மொழியில் திறன் பெற காலத்தை இழக்க நேரிடும்.

4) பூர்வகுடிகளின் கல்வி அறிவு கற்றல் திறன் குறையும்

5) நுண்ணறிவு முடக்கப்படும்.

## 7.2.2 ஒரு மொழியை எப்படி இரண்டாக உடைப்பது?

வட்டார வழக்கு மொழிகளை ஆராய வேண்டும். அந்த மக்களிடம் உங்கள் மொழி உயர்ந்தது என கூறி மேம்படுத்துவதாக காட்டி புதிய எழுத்துருக்களை - வடிவங்களை அறிமுக படுத்தவேண்டும்.

இரண்டாக பிரிக்கபட்ட இரண்டு வட்டாரங்ளிலும் கலை, இலக்கியம், ஊடகம் வழியாக வழக்கு சொற்களாக ஒரே பொருளுக்கு இரு பகுதியிலும் இரு வேறு சொற்களை கையாள வேண்டும். இவ்வாறு வெவ்வேறு சொல்வழக்கு மற்றும் வெவ்வேறு வரிவடிவம் ஆகியவற்றால் பிரிக்கபடும் மொழி தனி தனி பெயர்களால் வழங்கப்பட்டு இரு மொழிகளாக பிரியும்.

## 7-2-3 <u>மொழி வழி இன பிரிப்பு</u>

1) **<u>வட்டார மொழியை புதிய மொழியாக உருவாக்கல்</u>**

எழுத்து உருக்களை மாற்றி அல்லது புதிய எழுத்து உருக்களை உண்டாக்கி, ஊடகம், கலை, கல்வி மூலம் மக்களின் சொல் வழக்குகளை மாற்றிய பின்பு அந்த மொழி ஒரு புதிய மொழியாக உருவெடுக்கும்.

2) **<u>மொழியை உயர்த்தி காட்டுதல்</u>**

புதிய மொழியை வரலாற்றுக்கு முற்பட்டதாக காட்ட வேண்டும். அதற்கான புராணங்கள், கதையாடல்கள் போன்றவற்றை உருவாக்க வேண்டும்.

மற்ற மொழிகளை விட அது உயர்ந்ததென்றும், முற்பட்டதென்றும் காட்டுவதற்கு எல்லாவித உபாயங்களையும் பயன்படுத்த வேண்டும்.

3) **<u>வெறுப்பை விதைத்தல்</u>**

'பழங்காலம் பொற்காலம்' என்ற கருத்தை பயன்படுத்தி புதிய மொழி பேசும் மக்கள் உயர்ந்த வசதிகளை வாழ்க்கை வாழ்ந்ததாகவும், அவர்களை சுற்றி வாழும் மற்ற மொழி

மக்களால் இன்றைய இழிநிலைக்கு வந்ததாகவும் கட்டு கதைகளை உருவாக்கி, வரலாற்றை திரித்து எழுதி பரப்ப வேண்டும்.

4) **<u>இன குழுவின் ரத்த தொடர்பை முழுமையாக உடைத்தல்</u>**

இப்போது ரத்த சம்பந்தமுள்ள இனகுழுவினர் இரு மொழிகளிலும் இருப்பார்கள். அவர்களுக்குள் மொழிவாதத்தை கிளப்பி, புதிய மொழி பேசும் இனகுழுவிற்கு புதிய பெயர் இட்டு அல்லது பழைய பெயரை திரிந்து வழங்கி மீண்டும் அவர்களுக்குள் தொடர்பு ஏற்படாதபடி இனகுழுக்களை மொழிவாரியாக உடைக்க வேண்டும்.

பின்பு மற்ற தந்திரங்களை கையாள வேண்டும்.

## 7 - 3 ஆற்றல்மிகு மக்கள்

ஆதிக்க அரசுகள் கடின முயற்சி எடுத்து, பலவிதங்களில் திட்டமிட்டு அடிமை மக்களை நசுக்கினாலும்.

அவர்களில் இருந்து ஆற்றல் / திறன் மிகுந்தவர் உருவாவதை தவிர்க்க முடியாது.

அவ்வாறு உருவாகும் அவர்களை என்ன செய்ய வேண்டும்?

அவர்களை அந்த சமுதாயத்தில் இருந்து பிரித்து எடுக்க வேண்டும்.

### <u>7-3-1 ஆற்றல் / திறன் மிக்கவரை பிரிந்தெடுத்தல</u>

மனிதரில் பெரும்பான்மையோர், சுயநலமிகள், சுகத்தை விரும்புபவர்கள், பாதுகாப்பை விரும்புபவர்கள் என்பதன் அடிப்படையிலும், திறன் மிக்கார் தான் உயர்ந்தவர்கள் என்ற தன்முனைப்பு கொண்டவர்கள் என்பதன் அடிப்படையிலும் இதை கையாள வேண்டும்.

மற தன்மையில் ஆற்றல் மிக்கவரை தம்முடைய சமூக பாதுகாப்புபடை, நாடுகாவல் படையில் இணைத்து கொள்ள வேண்டும்.

அறிவின மிக்காரை அறிவுசார் அமைப்புகளில் இணைத்து கொள்ள வேண்டும், தொழில் ஆற்றல் மிக்கவரை தொழில் வளர்ச்சி அமைப்புகளில் இணைத்து கொள்ள வேண்டும்.

இவற்றின் மூலம் அவர்களின் ஆற்றலை / திறனை ஆதிக்க அரசு தன்னுடைய நன்மைக்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

## 7-3-2 மயக்கப்படுத்தல்

'திறன் மிகுந்த மக்கள்

அந்த சமூகத்தின் நீட்சிகள்'

'திறன் மிகுந்தவரை அந்த சமூகத்திலிருந்து பிரிந்து எடுத்த பின்பு எந்த சமூகத்திலிருந்து அவர்கள் வந்தார்களோ?

அந்த சமூகத்திற்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்புகளை நீக்க / முறிக்க வேண்டும்.

அந்த சமூகத்தின் மற்றவர்கள் பின் தங்கியவர்கள் முன்னேற அவர்கள் திறமை பயன்படாதபடி செய்ய வேண்டும்'.

### 1) மூளையை அடிமைபடுத்தல்

ஆதிக்க இன மக்களின் மேலாண்மையை, பலவித தந்திரங்களை பயன்படுத்தி, அந்த திறன் மிக்கவர்களை ஏற்றுகொள்ள செய்ய வேண்டும். அவர்கள் மூளையை அடிமைபடுத்தி தமது பிரச்சார கருவியாக பயன்படுத்தலாம். தமது வளர்ச்சிக்கு பயன்படுத்தவேண்டும்.

### 2) வாழ்க்கையை அடிமைபடுத்தல்

திறன் மிகுந்தவர்கள், தங்களுடைய திறமை, செல்வம், செல்வாக்கு போன்றவற்றை சிறிதளவு பயன்படுத்தினாலும் அவர்களுடைய சொந்த சமூகம் பெரிய முன்னேற்றம் அடையும்.

திறன் மிக்கவர்கள் தமது சமூகத்திற்கு தம்முடைய செல்வம், செல்வாக்கு, திறமை போன்றவற்றை சிறிதும் பயன்படுத்த முடியாதபடி அவர் சிந்திக்க முடியாதபடி அவர்களின் வாழ்க்கை முறையை அடிமைபடுத்த வேண்டும்.

அவர்களுக்கும், அவர்களின் சொந்த சமூகத்திற்கும் பழக்க வழக்கம் கலாசாரம் வாழ்க்கை முறையில் வேறுபாட்டை ஏற்படுத்த வேண்டும்.

சுயநலம், கௌவரம், வசதி, கடன், ஆசை, உயர்வு எண்ணம், அடிமைதனத்தை ஏற்படுத்தும் பழக்க வழக்கங்கள், கேளிக்கை போன்ற மீண்டுவர முடியாத செயற்கையான வாழ்க்கை சுழல்களில் மீளமுடியாதபடி சிக்கவைக்க வேண்டும்.

## 7-4 ஆற்றல் மூலங்கள்

மனித வாழ்வுக்கு நிலம், நீர், நெருப்பு, காற்று போன்றவை ஆற்றல் மூலங்களாக பயன்படுகின்றன.

மனிதனின் ஆற்றல் மூலமும் முதல் தேவையுமான உணவை கட்டுப்படுத்துவதன் மூலம் நாட்டை கட்டுபடுத்தலாம், ஆதிக்கம் செய்யலாம்.

தொழிலை கட்டுபடுத்துவதன் மூலம் நாட்டின் வசதி, வளர்ச்சி, எதிர்ப்புணர்வு போன்றவற்றை கட்டுபடுத்தி ஆதிக்கம் செய்யலாம்.

அவற்றின் வளத்தை தன்னுடைய வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம்.

ஆக உணவு, மற்றும் தொழிலை கட்டுபடுத்த அடிப்படை ஆற்றல் மூலங்களின் மீது தாக்குதல் நடத்த வேண்டும்.

### 7-4-1 நிலத்தின் மீது தாக்குதல்

தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நிலத்தின் வளத்தை குன்ற செய்தல், பயனற்றுப்போக செய்தல், ராணுவம், தீவிரவாதம், வளர்ச்சி திட்டங்கள், வன்முறை, இனவாத தாக்குதல் போன்றவற்றின் மூலம் பறிமுதல் செய்தல், மக்களுக்கு மண்ணின் மீது உரிமை

இழக்க செயதல், கனிம வளங்கள் மீது உரிமையை இழக்க செய்தல், நில எல்லைகளை கட்டுப்படுத்தல், போக்குவரத்து வழிகளை துண்டித்தல், வெளி உலக தொடர்பை நீக்குதல் போன்றவை நிலத்தின் மீது தாக்குதல் வழிமுறை ஆகும்.

## 7-4-2 நீரின் மீது தாக்குதல்

நீரின் மீது தாக்குதலை நான்கு வகையாக பிரிக்கலாம்.

அ) மழைநீர் ஆ) ஆற்றுநீர் இ) நிலத்தடி நீர் ஈ) கடல் நீர்

### அ) மழைநீர்

எல்லாவித தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி மழைவளம் குன்ற செய்தல், மழை பொழியாமல் இருப்பதற்கான வழிமுறைகளை பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக வளர்ச்சி திட்டங்கள் என்ற பெயரில் மேகங்களை தடுக்கும் மலை தொடர்களை சிதைத்தல், அழித்தல், உயரம் குன்ற செய்தல், பாறைகளை உடைத்து சாலைகளுக்கும், கட்டுமானத்துக்கும் பயன்படுத்தல், மேகங்கள் மீது குளிர்காற்றுபடுவதற்கு காரணமான காடுகளை அழித்தல், மரங்களை வெட்டுதல், காடுகளை காக்கும் வனவிலங்குகளை அழித்தல். மலைவாழ் மக்களை வெளியேற்றுதல், தொழிற்சாலைகள் மூலம் நச்சு புகைகளை வெளியேற்றி அமில மழை பொழிய செய்தல்.

### ஆ) ஆற்றுநீர்

முறையற்ற திட்டங்கள் மூலம் ஆற்றுநீரை வீணடிக்க வைத்தல் கழிவுநீரை கலந்து பயன்படுத்தமுடியாதபடி நச்சுநீராக மாற்றுதல், ஆற்றுநீரை அடைத்து வைத்து கொள்ளுதல், திசை திருப்புதல், ஆற்றுநீர் உற்பத்தி ஆகும் இடத்தை, ஆற்று வழியை தன்னுடைய கட்டுபாட்டிற்குள் வைத்து கொள்ளுதல். ஒழுங்கு முறையற்று நீரை திறந்து விடுதல், திடீர் வெள்ள பெருக்கை ஏற்படுத்துதல், நீர் சேமிப்பை தடுத்தல்.

### இ) நிலத்தடி நீர்

நிலத்தடி நீர் வளத்தை குன்ற செய்தல், பயனற்று போக செய்தல், அதிக நீர் தேவைப்படும் பயிரினங்களை பயிரிட செய்வதன் மூலமாக. தொழிற்சாலைகள் மூலமாக ' நிலத்தடி நீரை நிரந்தரமாக வற்ற செய்தல், நிலத்தடி நீர் சேமிக்க் காரணமான ஏரி, குளம், குட்டை போன்றவற்றை பலவித வழிகளில் அழித்தல்.

### ஈ) கடல்நீர்

தொழில் நுட்பங்கள் மூலம் கடல்நீரை நச்சாக்குதல், அசுத்தமாக்குதல், கடல் உயிரிகளை ஒழித்தல், கடல்வளத்தை முடமாக்குதல், கடல்வழி போக்குவரத்தை, வர்த்தகத்தை தடுத்தல், துண்டித்தல், அனுமதிக்க மறுத்தல், கடல் பாதுகாப்பை தன்னுடைய அதிகாரத்துக்குள் வைத்தல், கடல் சார் மக்களை சிறிது சிறிதாக ஒழிததல், கடல் எல்லையை சுருக்குதல், கடற்கரை மீதும் கடல் மீதும், தீவுகள், திட்டைகள் மீதும் கடல்சார் மக்களை உரிமை இழக்க செய்தல், கடலை பாதுகாப்பு அற்றதும், ஆபத்து மிகுந்ததும் ஆக்குதல், வானிலை அறிக்கை, கடல்சூழல் அறிக்கை போன்றவற்றை தவறாக தருவதன் மூலமாக அம்மக்களை ஒழித்துகட்டுதல்.

## 7-4-3 நெருப்பின் மீது தாக்குதல்

தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஒரு நாட்டின் வெப்பநிலையை உயர்த்துதல் அல்லது குறைத்தல். நெருப்பு (ஆற்றல்) உற்பத்திக்கு பயன்படும் எரிபொருள்களான மின்சாரம், கச்சா எண்ணெய், அணு மூல பொருள்கள் போன்றவற்றை உற்பத்தி செய்ய முடியாமல் தடுத்தல், உற்பத்தியின் அளவை கட்டுபடுத்தல், வீணடிக்க செய்தல், மூலபொருள் பற்றாக்குறையை ஏற்படுத்துதல், உற்பத்தி செய்யும் தொழிலகத்தை அழித்தல், பயனற்று போகும்படி செய்தல், ஏற்றுமதி செய்யமுடியாமல் தடுத்தல், வாங்குபவர் இல்லாமல் செய்தல், உற்பத்தி நிறுவனங்களை கையகப்படுத்துதல்.

## 7-4-4 காற்றின் மீது தாக்குதல்

தொழில் நுட்பத்தின் மூலம் காற்றின் தன்மையை மாற்றி அமைத்தல், மாசடைய செய்தல், ஈரபதத்தை கட்டுப்படுத்துதல், வான்வழியை கட்டுப்படுத்துதல், காற்றின்மீது ஒலி மாசு, ரசாயன மாசுகளை ஏற்படுத்துவதன் மூலம் மக்களை நோயுற செய்தல், மனநிலை பிறழ செய்தல்.

## 7 – 5 இனகுழு ஆதிக்கத்தின் இறுதி லட்சியம்

➢ அரசியல் ஆட்சி நீண்டகாலம் நிலைக்கும் போது

ஆட்சி மற்றும் அதிகார வர்க்கம்,

ஒரே இனகுழுவாக பரிணமிக்கும்

➢ அவ்வாறு இருக்கும் போது

எல்லா ஆட்சி இன குழுவையும் எதிர்ப்பதை விட, அந்த இனகுழு மக்களை பற்றி எந்த மையகருத்தை கொண்டுள்ளது. நாட்டை எந்த கண்ணோட்டத்தில் பார்க்கிறது என கவனிக்க வேண்டும்.

➢ ஆட்சி இனகுழு நல்லரசு இன குழுவாக இருந்தால் சரியே அவர்கள் ஆட்சி செய்வது சரியே

அவ்வாறு இல்லாமல், ஆதிக்க அரசு இனகுழுவாகவோ,

இனவாத ஆதிக்க அரசு இனகுழுவாகவோ,

தந்திர இனவாத ஆதிக்க அரசு இனகுழுவாகவோ

இருந்தால், அதை மக்கள் பூர்வகுடிகள் ஒழித்துவிட வேண்டும்.

ஏனெனில்,

இந்த மூன்று வித அரசுகளும், தன் இனம் அந்த நாட்டில் பெருகி வலுக்க அந்த பூர்வகுடிகளின் உழைப்பையும், இயற்கை வளத்தையும் பயன்படுத்தும்.

அந்த பூர்வகுடி மக்களுக்கு தலைமுறை, தலைமுறையாக துன்பம் தொடர்கதையாகும். அவர்கள் சந்ததியினர் கூட மகிழ்ச்சியாக வாழ மாட்டர்கள்.

கடைசியில்,

தன் இனம் பெருகி, வலுத்தவுடன்

படிபடியாக பூர்வகுடிகள் பலவித தந்திரங்களை பயன்படுத்தி ஒழிக்கப்படுவார்கள்.

கடைசியில் பூண்டோடு இன படுகொலை செய்யப்படுவார்கள்.

## 7-6 நல்லரசை தவிர, மற்ற எவ்வித ஆதிக்க அரசாக இருந்தாலும் அவர்களின் குறிக்கோள் என்னவாக இருக்க வேண்டும்.

ஆதிக்கத்தின் மூலமாகவே,

இனவாத ஆதிக்கத்தின் மூலமாகவே,

தந்திர இனவாத ஆதிக்கத்தின் மூலமாகவே கட்டுபாட்டிற்குள் உள்ள அந்த நாட்டின் பூர்வகுடிகளை சுரண்டி தன் ஆதிக்கத்தை வலுவடுத்தி, தன் இனத்தை பெருக்க வேண்டும்.

பின்பு படிபடியாகவோ, ஒட்டு மொத்தமாகவே பூர்வகுடிகளை பலவிதங்களில் இன ஒழிப்பு செய்வார்கள்.

ஆக அந்த வன்முறை இயக்கங்களை அழிப்பதன் பேரில் தமது கடுபாட்டில் உள்ள பலவிதங்களில் மூளை சலவை செய்யப்பட்ட, நுண்ணறிவு முடக்கப்பட்ட பூர்வகுடி படை அணிகளை கொண்டு அப்பகுதியில் உள்ள பூர்வகுடி இன மக்களை முற்றிலுமாக அழிந்தொழிப்பார்கள்.

# பின் இணைப்பு

(பல வித இனகுழுகளும் உலகம் முழுவதும் பரவி வாழ ஆரம்பித்துவிட்ட இந்த காலத்தில் எந்தநாடு இத்திசையில செல்கிறது என முன்கூட்டியே அறிய உதவும் கட்டுரை இது).

## (அ) அரசு இயலில் இனவாதம்

**(ஆதாரம் A Century of Genocide – Eric O. Weiz)**

## (ஆ) இன படுகொலையை பற்றிய ஆய்வு -

**கிரிகரி ஸ்டாண்டரின் - யேல் பல்கலைகழகம்**

## (அ) அரசு இயலில் இனவாதம்

**(ஆதாரம் A Century of Genocide – Eric O. Weiz)**

(1) பதவியை விரும்புபவர்கள் எளிதாக செய்ய கூடியது எது?

எந்த நாட்டிலும் தப்பாமல் பலிக்க கூடிய தந்திரம் எது?

- இனவெறி பிரசாரம், தந்திரம்

(2) இனவெறியர்கள் வெறியை எப்படி வளர்ப்பார்கள்?

- மக்களுக்குள் சந்தேக விதையை விதைப்பார்கள்
- வெறுப்பை வளர்ப்பார்கள்
- கடைசியில் கொலை களத்தை உண்டு பண்ணுவர்கள்

# (ஆ) இன படுகொலையை பற்றிய ஆய்வு - கிரிகரி ஸ்டாண்டரின் - யேல் பல்கலைகழகம்

இனபடுகொலை 8 (எட்டு) நிலைகளை உள்ளடக்கியது.

(1) இன அடையாளங்களை ஏற்படுத்துவது

நாம், அவர்கள் என பிரித்து பார்க்க வைப்பதற்காக தோலின் நிறம், வணங்கும் தெய்வம், பேசும் ஒலி என ஏதாவது வேறுபாடுகளை கண்டறிதல் ஏற்படுத்துதல்.

(2) இன அடையாளங்களை பெரிதுபடுத்தல்

...... கள் குளிக்க மாட்டார்களே ......கள் கஞ்சமாச்சே என எளிமைபடுத்தப்பட்ட இன பிம்பங்களை மனதில் பதித்தல்

யூதர்கள் அனைவரும் மஞ்சள் நட்சத்திரம் அணியவேண்டும் என ஹிட்லர் போட்ட சட்டம் இத்தகையதே

(3) விஷ பிரச்சாரம் செய்தலும் - தனிமைபடுத்தலும்

.... களின் அயோக்கியதனங்களை பிரச்சாரம் செய்தல்

... கள் கடையில் பொருள் வாங்காதீர்கள் என தனிமைபடுத்தல்

- ரூவாண்டா நாட்டின் அரசாங்க வானொலியில், 'டுட்ஸி இனத்தவர்களை கண்ட இடத்தில் கொல்லுங்கள்' என தொடர்ந்து சொல்லி கொண்டே இருந்தார்கள்.

(4) நடுநிலையாளர்களின் குரல்களை நசுக்குதல்

எழுச்சியூட்டும் பிரச்சாரங்களை கேட்டு உணர்ச்சி வசப்படாமல், ' அவர்களின் உடலிலும் ஓடுவது சிவப்பு ரத்தம் தானே'. ' அவர்களும் மனிதர்கள் தானே' - என சிந்திப்பார்கள் - இவர்களை இனதுரோகிகளாக சித்தரிக்க வேண்டும்.

அவர்களை (நடுநிலையாளர்களை) ஒழித்து கட்டி இரண்டு துருவங்கள் மட்டுமே மீதம் இருக்க வேண்டும்.

நடுவில் யாரும் நிற்க கூடாது. நிற்க முடியாது.

(5) திட்டமிடல்

(6) ஆள்திரட்டல், ஆயுதம் சேகரித்தல்

(7) கொலை வெறி தாண்டவம்

(8) கொன்று புதைத்தல் பின்பு,

நான் செய்யவே இல்லையே என சாதிப்பது.